بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 6

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 5

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

21 ஜமாதிஸ் ஸானீ 1442 ஹிஜ்ரி கமரி 04 தப்லீக் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக்
04 பிப்ரவரி 2021

## அல்லாஹ்வின் கட்டளை

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَتَّخِذُوا الْكٰفِرِيْنَ اَوْلِيَآءَ مِنْ دُوْنِ الْمُؤْمِنِيْنَ ؕ اَتُرِيْدُوْنَ اَنْ تَجْعَلُوْا لِلّٰهِ عَلَيْكُمْ سُلْطٰنًا مُّبِيْنًا

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களை விட்டு விட்டு, நிராகரிப்பவர்களை (உங்களுடைய) நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் உங்களுக்கு எதிராக மிகத் தெளிவான குற்றச்சாட்டி(னைச் சுமத்துவத)ற்குரிய வாய்ப்பை இறைவனுக்குக் கொடுக்க விரும்புகின்றீர்களா? (4:145)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காரணமாக ஒரு தன்னிகரற்ற மற்றும் மகத்துவமிக்க மாற்றம் ஏற்பட்டு விட்டது. அல்லாஹ்! அல்லாஹ்! இது எத்துனை மகத்தான மேன்மையாகும். அல்லாஹ்விற்குரிய உரிமைகள் மற்றும் அடியார்களுக்குரிய உரிமைகள் இரண்டையும் நடுநிலை என்ற அளவீட்டில் நிலைநிறுத்தினார்கள். இறந்தவற்றை உண்பவர்களையும், மரணித்த சமுதாயத்தையும் ஓர் உயர் தரமான, உயிருள்ள மற்றும் தூய்மையான சமுதாயமாக ஆக்கி விட்டார்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

சமஸ்கிருதம் போன்ற மொழிகள் மரணிப்பதற்கு அருகில் உள்ளன. அதில் புத்தகங்களும் இல்லை; வேறு எதுவும் இல்லை. இதேபோன்றே கிறிஸ்தவர்களின் நிலையும் உள்ளது. அதாவது புதிய ஏற்பாட்டின் அசல் மொழியின் பக்கம் அவர்களுக்கு கவனமே இருக்கவில்லை. அவ்வாறிருக்க இஸ்லாத்தின் மீது ஏன் ஆட்சேபனை செய்யப்படுகின்றது என்பது எனக்கு வியப்பாக உள்ளது. இஸ்லாத்தின் இறைவன் எந்த செயற்கை இறைவனும் அல்ல. மாறாக, நிரந்தரமாக நிலைபெற்றுள்ள, வல்லமைமிக்க இறைவனே (இஸ்லாத்தின் இறைவன்) ஆவான். அடுத்து நபித்துவத்தின் அசல் நோக்கம் என்ன? என்று நபித்துவம் தொடர்பாக சிந்தியுங்கள்.

தூதர் என்பவர் தேவையின் போது வருபவர். பின்னர் அந்த தேவையை அழகிய முறையில் நிறைவேற்றுபவர் ஆவார். எனவே இந்த பெருமையும் கூட நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கே கிடைத்துள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றியபோது அரபு நாடு மற்றும் உலகத்தின் நிலை எவ்வாறிருந்தது என்று எவரும் அறியாமல் இல்லை. முற்றிலும் காட்டுமிராண்டி மக்களாக இருந்தனர். உண்பதையும், குடிப்பதையும் தவிர வேறு எதுவும் அவர்களுக்குத் தெரியாது. அடியார்களுக்குரிய உரிமைகளையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை; அல்லாஹ்விற்குரிய உரிமைகளையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. எனவே அல்லாஹ் அவர்களின் நிலைகளை يَأْكُلُوْنَ كَمَا تَأْكُلُ الْاَنْعَامُ (47:13) என்று ஒரு பக்கம் படம்பிடித்துக் காட்டியுள்ளான்.

அடுத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனை எந்த அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் அவர்களின் நிலை يَبِيْتُوْنَ لِرَبِّهِمْ سُجَّدًا وَّ قِيَامًا ஆக மாறி விட்டது. அதாவது தனது இறைவனின் நினைவில் இரவுகளை சஜ்தாக்கள் செய்வதிலும், இறைவன் முன் நிற்பதிலும் அவர்கள் கழித்து வந்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காரணமாக ஒரு தன்னிகரற்ற மற்றும் மகத்துவமிக்க மாற்றம் ஏற்பட்டு விட்டது. அல்லாஹ்! அல்லாஹ்! இது எத்துனை மகத்தான மேன்மையாகும். அல்லாஹ்விற்குரிய உரிமைகள் மற்றும் அடியார்களுக்குரிய உரிமைகள் இரண்டையும் நடுநிலை என்ற அளவீட்டில் நிலைநிறுத்தினார்கள். இறந்தவற்றை உண்பவர்களையும், மரணித்த சமுதாயத்தையும் ஓர் உயர் தரமான, உயிருள்ள மற்றும் தூய்மையான சமுதாயமாக ஆக்கி விட்டார்கள்.

அறிவார்ந்த அல்லது செயல் ரீதியிலான சிறப்புகள் என்ற இரண்டு சிறப்புகளே உள்ளன. செயல் நிலைகள் يَبِيْتُوْنَ لِرَبِّهِمْ سُجَّدًا وَّ قِيَامًا என்பதற்கேற்ப இருந்தது.

அறிவார்ந்த நிலை இவ்வாறு உள்ளது. அதாவது எந்த அளவிற்கு புத்தகங்களின் தொடர் மொழிக்கு தொண்டாற்றக்கூடியதாக இருக்கின்றதென்றால் அதற்கு உதாரணம் கிடைப்பதில்லை. மற்றொரு பக்கம் நான் கிறிஸ்துவர்களை பார்க்கும்போது எனக்கு மிகவும் ஆச்சரியம் ஏற்படுகிறது. ஹவாரியீன்கள் கிறிஸ்தவர்களாக மாறி என்ன முன்னேற்றம் அடைந்தார்கள்?

யூதர்களைச் சேர்ந்த யூதாஸ் என்பவர் இயேசுவின் பொருளாளராக இருந்தார். சில முறை மறுதலித்து வந்துள்ளார். 30 காசுகள் பெற்றுக் கொண்டு குருவை காட்டிக் கொடுத்து விட்டார். இதுவே அவரின் வெளிப்படையான நிலையாக இருந்தது. இயேசுவின் கரங்களில் 2000 ரூபாய் இருந்து வந்தது. அவர்களின் நிலை ஒரு பக்கம் இவ்வாறு உள்ளது. மற்றொரு பக்கம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிலை எவ்வாறிருந்தது என்றால், வீட்டில் எதுவும் உள்ளதா? என்று மரணத் தருவாயில் கேட்கப்பட்டது. ஒரு தீனார் இருப்பதாக ஹஸ்ரத் ஆயிஷா சித்தீக்கா (ரலி) அவர்கள் கூறினார்கள். அதைப் பங்கிட்டு கொடுத்து விடுங்கள். அல்லாஹ்வின் தூதர் அல்லாஹ்வை நோக்கி பயணம் செல்லும்போது வீட்டில் ஒரு தினாரை விட்டு விட்டுச் செல்ல முடியுமா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 249,250 – 2018 ஆண்டு காதியான் பதிப்பு)

**எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு**

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபாவும், அன்னாரின் மருமகனுமாகிய ஹஸ்ரத் அலீ முர்தஸா (ரலி) அவர்களின் போற்றுதலுக்குரிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 01 ஜனவரி 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **சுலஹ்** மாதம் **01 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு நடைபெற்று வருகின்றது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் உயிர்த் தியாகம் தொடர்பாக கூறுகின்றார்கள்: விவகாரங்கள் முழுமையாக தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அந்நிலையில் எத்தனை பெரிய மனிதர்கள் இருக்கின்றார்களோ அவர்களை கொலை செய்து இந்த குழப்பத்தை தீர்க்க வேண்டும் என்று காரிஜ்கள் தங்களுக்குள் ஆலோசனை செய்தனர். எனவே அவர்களுள் வீரமிக்க மனிதர்கள் இவ்வாறு உறுதிமொழி எடுத்தனர். அதாவது, அவர்களில் ஒருவர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களையும், ஒருவர் ஹஸ்ரத் முஆவிய்யா (ரலி) அவர்களையும், ஒருவர் அம்ர் பின் ஆஸ் அவர்களையும் ஒரே நேரத்தில் கொலை செய்து விடுவோம் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

ஹஸ்ரத் முஆவியாவை நோக்கி கொலை செய்ய சென்றவன் தாக்குதல் நடத்தியபோதிலும் அவனது வாள் சரிவர படவில்லை. எனவே ஹஸ்ரத் முஆவியா அவர்கள் சாதாரண காயமுற்றார்கள். மேலும் அந்த நபர் பிடிபட்டு பின்னர் கொலை செய்யப்பட்டு விட்டான். அம்ர் பின் ஆஸ் அவர்களை கொலை செய்ய சென்ற நபரும் தோல்வியுற்றான். ஏனென்றால், நோயின் காரணமாக அன்னார் அப்பொழுது தொழ வரவில்லை. ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்கு பகரமாக அந்த நேரத்தில் எவர் தொழ வைப்பதற்காக வந்தாரோ அவர் மீது அவன் தாக்குதல் நடத்தினான். அவன் பிடிபட்டான். அதன் பிறகு கொலை செய்யப்பட்டான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை கொலை செய்வதற்காக சென்ற மனிதன், அன்னார் சுபுஃஹ் தொழுகைக்காக நிற்க முற்பட்டபோது அன்னார் மீது தாக்குதல் தொடுத்தான். அதனால் மிகவும் அபாயகரமான காயங்கள் ஏற்பட்டன. அந்த நபர் அன்னார் மீது தாக்குதல் தொடுத்தபோது, அலீயே உமது அனைத்து கூற்றுகளையும் ஏற்றுக் கொள்வதற்கு நீர் தகுதி படைத்தவர் அல்ல. மாறாக, இந்த உரிமை அல்லாஹ்விற்கு மட்டுமே உள்ளது என்று கூறியவாறு அந்த நபர் தாக்குதல் தொடுத்தான்.

(அன்வாரே கிலாஃபத், அன்வாருல் உலூம் தொகுதி 3 பக்கம் 202)

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் உயிர்த்தியாகம் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். ஹஸ்ரத் உபைதுல்லாஹ் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம், அலீயே! முன்னவர்களிலும், பின்னவர்களிலும் மிகவும் துர்பாக்கியசாலியான மனிதன் யார் என்று உமக்குத் தெரியுமா? என்று கேட்டார்கள். அதற்கு அன்னார், அல்லாஹ்வும் அவனது தூதருமே எல்லாவற்றையும் நன்கு அறிந்துள்ளனர் என்று கூறினார்கள். அப்போது, முன்னவர்களில் மிகவும் தீய மனிதன் ஹஸ்ரத் சாலிஹ் (அலை) அவர்களின் ஒட்டகத்தின் கால்களை வெட்டியவன் ஆவான் என்றும், அலியே! உம்மீது ஈட்டியால் குத்துபவன் பின்னர்வர்களில் மிகவும் துர்பாக்கியம் கொண்ட மனிதனாக இருப்பான் என்றும் அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும் எங்கு ஈட்டியால் குத்தப்படுமோ அந்த இடத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சைகை செய்து காட்டினார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் அடிமைப் பெண்ணான உம்மே ஜாஃபர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கரங்களில் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தேன். அப்போது அன்னார் தனது தலையை உயர்த்தினார்கள். மேலும் தனது தாடியைப் பிடித்து மூக்கு வரை உயர்த்தினார்கள். பின்னர் தாடியை நோக்கி, உன்னைப் பற்றி நான் என்ன கூற? நீ நிச்சயம் இரத்தத்தால் கறை படிவாய் என்று கூறினார்கள். பின்னர் ஜுமுஆ நாளன்று அன்னார் ஷஹீதாக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவம் தொடர்பாக இவ்வாறு கூறப்பட்டுள்ளது. இப்னு ஹன்ஃபியா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் ஹஸன் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களுடன் குளியலறையில் அமர்ந்திருந்தேன். அப்போது இப்னு முல்ஜிம் எங்களிடத்தில் வந்தான். அவன் வந்ததும் ஹஸ்ரத் ஹஸன் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) ஆகிய இருவரும் அவனிடம் வெறுப்பை வெளிப்படுத்தினார்கள். மேலும் இவ்வாறு இங்கு எங்களிடத்தில் வருவதற்கு உமக்கு எப்படி தைரியம் வந்தது? என்றும் கூறினார்கள். நான் அவர்கள் இருவரிடமும் அவனைக் கண்டு கொள்ள வேண்டாம். உங்களுக்கு எதிராக இவன் என்ன செய்ய எண்ணியுள்ளானோ அது இதை விடவும் மிகவும் அபாயகரமானதாகும் என்று கூறினேன்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மீது தாக்குதல் தொடுத்த நேரத்தில் இப்னு முல்ஜிம் கைதியாக கொண்டு வரப்பட்டான். அப்போது இப்னு ஹன்ஃபியா அவர்கள், இவன் எந்த நாளில் குளியலறையில் நம்மிடம் வந்தானோ அப்போதே நான் அறிந்து கொண்டேன் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், இவர் கைதி ஆவார். இவருக்கு நல்ல முறையில் விருந்து உபசரிப்பு செய்யுங்கள். மேலும் அவரை கண்ணியத்துடன் தங்க வையுங்கள். ஒருவேளை நான் உயிருடன் இருந்தால் ஒன்று நான் அவரை கொலை செய்து விடுவேன். அல்லது அவரை மன்னித்து விடுவேன். ஒருவேளை நான் மரணித்து விட்டால் அவரை எனக்குப் பழிவாங்கும் விதமாக கொலை செய்து விடுங்கள். வரம்பு மீறாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான குஸம் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் எனது பெரிய மகனிடம் தனது வஸிய்யத்தில் இவ்வாறு எழுதினார்கள்: இவனது (அதாவது இப்னு முல்ஜிமின்) வயிற்றிலும், வெட்கத்தலத்திலும் ஈட்டியால் குத்தாதீர்கள். வெளியேறியவர்களிலிருந்து மூன்று நபர்கள் அதாவது ஹமீர் கோத்திரத்திரத்தைச் சேர்ந்த அப்துர் ரஹ்மான் பின் முல்ஜிம் முராதி, பர்க் பின் அப்தில்லாஹ் தமீமி மற்றும் அம்ர் பின் பகீர் தமீம் என்ற மூன்று நபர்கள் நியமிக்கப்பட்டார்கள். இந்த மூவரும் மக்காவில் ஒன்று கூடினர். அவர்கள் உறுதியான உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டனர். அதாவது அவர்கள் ஹஸ்ரத் அலீ பின் அபீ தாலிப், ஹஸ்ரத் முஆவியா பின் அபீ சுஃப்யான் மற்றும் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் ஆகியோரை நிச்சயம் கொலை செய்வோம் என்று உறுதி பூண்டனர்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோன்று இந்த மூவரையும் கொலை செய்ய முயன்றனர். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்ற சம்பவத்தில் நாங்கள் இவர்களிடமிருந்து மக்களை விடுவிப்போம் என்று அவர்கள் கூறியதாக அன்னார் கூறுகின்றார்கள். நான் அலீ பின் அபீ தாலிப் அவர்களை கொலை செய்கின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றேன் என்று அப்துர் ரஹ்மான் பின் முல்ஜிம் கூறினான். முஆவியாவை கொலை செய்கின்ற பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கின்றேன் என்று பர்க் கூறினான். நான் மக்களுக்கு அம்ர் பின் ஆஸ் அவர்களிடமிருந்து விடுதலை வழங்குகின்றேன் என்று அம்ர் பின் பகீர் கூறினான். அவர்கள் மூவரும் இந்த விஷயத்தின் மீது உறுதிமொழி எடுத்தனர். மேலும் தங்களிடம் கூறப்பட்ட நபர்களை கொலை செய்யாமல் பின்வாங்க மாட்டோம் என்றும், ஒன்று அவர்களை கொலை செய்வோம் அல்லது அதே வழியில் எங்களது உயிரை விட்டு விடுவோம் என்றும் அவர்கள் ஒருவர் மற்றவருக்கு நம்பிக்கையூட்டினர். அதாவது ஒன்று அந்த மூவரையும் கொலை செய்து விடுவோம். அல்லது எங்களது உயிரை விட்டு விடுவோம். திரும்பி வர மாட்டோம் என்று அவர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

அவர்கள் தங்களுக்குள் ஆலோசனை செய்து ரமலான் 17ஆம் நாள் இரவை அந்த நோக்கத்திற்காக நிர்ணயித்தனர். அன்று அவர்களில் ஒவ்வொரு நபரும் தன்னால் தேடப்பட்ட நபர் அதாவது அவர்கள் யாரை செய்ய இருந்தார்களோ அவர்கள் வசித்த நகரத்தை நோக்கி சென்றனர். கூஃபாவை நோக்கி அப்துர் ரஹ்மான் பின் முல்ஜிம் சென்றான். மேலும் அங்கிருந்த தனது காரிஜி நண்பர்களை சந்தித்தான். ஆனால் அவர்களிடம் தனது நோக்கத்தை அவன் மறைத்து வைத்தான். அவன் அவர்களை சந்திக்க செல்வான். அவர்களும் அவனை சந்திக்க வந்தனர்.

ஒரு நாள் அவன் தீமுர் ரபாப் கோத்திரத்தின் ஒரு கூட்டத்தைக் கண்டான். அக்கூட்டத்தில் கிதாம் பின்த் சஜ்னா பின் அதீ என்ற பெண்மணி இருந்தார். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் நஹ்ர்வான் போரின்போது அந்த பெண்ணின் தந்தையையும், மகனையும் கொலை செய்திருந்தார்கள். அவனுக்கு (அதாவது இப்னு முல்ஜிமிற்கு) அந்த பெண்ணை மிகவும் பிடித்திருந்தது. எனவே நிக்காஹ்விற்கான தூதுச் செய்தியை அனுப்பினான். அப்போது, நீர் என்னிடம் ஒரு வாக்குறுதி செய்யாதவரை என்னால் உம்மை திருமணம் செய்து கொள்ள முடியாது என்று அவள் கூறினாள். அதற்கு நீ என்ன கேட்டாலும் நான் உனக்கு தந்து விடுவேன் என்று இப்னு முல்ஜிம் கூறினான். அதற்கு, மூவாயிரம் மற்றும் அலீ பின் அபீ தாலிப் அவர்களின் கொலை என்று அவள் கூறினாள். அதாவது மூவாயிரம் திர்ஹம் தர வேண்டும். மேலும் அலீ பின் அபீ தாலிபை கொலை செய்ய வேண்டும். அதற்கு, அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் ஹஸ்ரத் அலீ பின் அபீ தாலிப் அவர்களை கொலை செய்வதற்காகவே இந்த நகரத்திற்கு வந்துள்ளேன். எனவே நீ கேட்டதை நிச்சயம் கொடுத்து விடுவேன் என்று அவன் கூறினான்.

பின்னர் இப்னு முல்ஜிம், ஷபீப் பின் புஜ்ரா அஷ்ஜயீ என்ற நபரை சந்தித்தான். தனது நோக்கத்தைப் பற்றி அவனிடம் கூறினான். தன்னுடன் தங்குமாறும் அவன் கூறினான். அவனது கூற்றை ஷபீப் ஏற்றுக் கொண்டான். அப்துர் ரஹ்மான் பின் முல்ஜிம் எந்த நாள் சுபுஹ் தொழுகை அன்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை ஷஹீதாக்க எண்ணி இருந்தானோ அந்த நாள் அஷ்அஸ் பின் கைஸ் கிந்தியின் பள்ளிவாசலில் இரகசியமாக இரவைக் கழித்தான். சுபுஹ் தொழுகை நேரத்தில் எழுந்திரு. சுபுஹ் நேரமாகி விட்டது என்று அஷ்அஸ் கூறினான். அப்போது அப்துர் ரஹ்மான் பின் முல்ஜிம் மற்றும் ஷபீப் பின் புஜ்ரா இருவரும் எழுந்தனர். மேலும் தனது வாளை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் வெளியேறும் பாதைக்கு எதிரே சென்று அமர்ந்து கொண்டனர்.

ஹஸ்ரத் ஹஸன் பின் அலீ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் அதிகாலையில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு அருகில் வந்து அமர்ந்து கொண்டேன். அப்போது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: இரவு முழுவதும் நான் எனது குடும்பத்தாரை எழுப்பிக் கொண்டிருந்தேன். பின்னர் அமர்ந்தவாறே எனது கண்களை தூக்கம் தழுவிக் கொண்டது. அப்போது நான் கனவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கண்டேன். அல்லாஹ்வின் தூதர் அவர்களே என்று நான் கூறினேன். (அதாவது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்:) நான் உங்கள் உம்மத்திலிருந்து கோணல் தன்மையையும், கடுமையான சண்டையையும் எதிர்கொண்டு வருகின்றேன் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீர் அவர்களுக்கு எதிராக துஆ செய்யும் என்று கூறினார்கள். அதற்கு நான், அல்லாஹ்வே! இவர்களை விட சிறந்த ஒன்றை இவர்களுக்குப் பகரமாக எனக்கு நீ வழங்குவாயாக. மேலும் என்னை விட மிக மோசமான நபரை எனக்கு பகரமாக இவர்களுக்கு வழங்குவாயாக என்று கூறினேன். இந்நிலையில் இப்னு நபாஹ் என்ற பாங்கு கொடுப்பவர் வருகை தந்தார். மேலும் தொழுகைக்கான நேரம் ஆகிவிட்டது என்று அவர் கூறினார்.

ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அப்போது நான் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கரங்களைப் பிடித்தேன். அவர்களும் எழுந்து நின்று செல்லத் தொடங்கினார்கள். இப்னு நபாஹ் அன்னாருக்கு முன்னால் சென்றார். நான் பின்னால் இருந்தேன். அன்னார் கதவை விட்டு வெளியேறியதும், மக்களே! தொழுங்கள். மக்களே! தொழுகை; தொழுகை. ஸலாத்; ஸலாத் என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அன்னார் தினமும் இவ்வாறே செய்து கொண்டிருந்தார்கள். அன்னார் வெளியில் புறப்படும்பொழுது அன்னார் கரத்தில் சாட்டை ஒன்று இருந்தது. அன்னார் மக்களை எழுப்பிக் கொண்டே செல்வார்கள். மேலும் வீடுகளின் கதவுகளில் அந்த சாட்டையை அடித்துக் கொண்டும் செல்வார்கள். அந்த நேரத்தில் கொலைகாரர்கள் இருவரும் அன்னாருக்கு முன்பு வந்தனர்.

நேரில் சம்பவத்தைக் கண்டவர்களில் சிலர் இவ்வாறு கூறுகின்றனர்: வாள் ஒளி வீசியதை நான் கண்டேன். மேலும் அலீயே! கட்டளை என்பது அல்லாஹ்வுக்கே உரியது. உமக்குரியது அல்ல என்று கூறியதையும் நான் கேட்டேன். பின்னர் மற்றொரு வாளையும் நான் கண்டேன். இருவரும் சேர்ந்து அன்னார் மீது தாக்குதல் தொடுத்தனர். அப்துர் ரஹ்மான் பின் முல்ஜிம் என்பவனின் வாள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் நெற்றியிலிருந்து தலை வரை சென்றடைந்தது. அதாவது மூளை வரை சென்றடைந்தது. ஆனால் ஷபீப் என்பவனின் வாள் வீட்டின் கதவின் பலகையில் சென்று பட்டது. அப்போது இந்த நபர் உங்களிடமிருந்து தப்பித்து ஓடி விடக்கூடாது என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறியதைக் கேட்டேன். மக்கள் அனைவரும் அவனை சுற்றி வளைத்துக் கொண்டனர். ஆனால் ஷபீப் என்பவன் தப்பி ஓடி விட்டான். அதே நேரத்தில் அப்துர் ரஹ்மான் பின் முல்ஜிம் கைது செய்யப்பட்டான். மேலும் அவன் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கொண்டு வரப்பட்டான். அதற்கு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், இவருக்கு நல்ல உணவு கொடுங்கள். மேலும் நல்ல மென்மையான படுக்கையை கொடுங்கள். நான் உயிருடன் இருந்தால் பின்னர் நான் இந்த இரத்தத்திற்கு பகரமாக மன்னிப்பதற்கும் அல்லது பழிவாங்குவதற்கும் உரிமை படைத்தவனாக இருப்பேன். நான் மரணித்து விட்டால் இவனை கொலை செய்து என்னுடன் சேர்த்து விடுங்கள் என்று கூறினார்கள். மேலும் நான் ரப்புல் ஆலமீன் முன்னிலையில், இவனிடம் சண்டை செய்வேன்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 25–27 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது பின்னர் இந்த விவகாரத்தை அல்லாஹ்வின் சன்னிதானத்தில் நான் எடுத்து வைப்பேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் மரணம் நெருங்கியபோது அன்னார் உயில் ஒன்றை எழுதினார்கள். அன்னாரின் உயில் இவ்வாறாகும்: பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். இது அலீ பின் அபீ தாலிப் செய்த வஸிய்யத் ஆகும். நான் சாட்சியம் வழங்குகின்றேன். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. அவன் ஏகன் ஆவான். அவனுக்கு இணை எவனும் இல்லை. மேலும் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனின் தூதரும், அடியாரும் ஆவார்கள். அன்னாரை அல்லாஹ் நேர்வழி மற்றும் உண்மையான மார்க்கத்துடன் அனுப்பி வைத்துள்ளான். அவன் இந்த மார்க்கத்தை மற்ற மார்க்கங்களின் மீது மேலோங்கச் செய்வதற்காக அன்னாருக்கு உண்மையான மார்க்கத்தை வழங்கி அனுப்பியுள்ளான். இணை வைப்பவர்கள் இதனை எவ்வளவு வெறுத்தாலும் சரியே. நிச்சயமாக எனது தொழுகை, எனது தியாகம், எனது வாழ்வு, எனது மரணம் ரப்புல் ஆலிமீனாகிய அல்லாஹ்வுக்கே உரியன. அவனுக்கு எந்த இணையும் இல்லை. அவனே எனக்கு கட்டளை வழங்கியுள்ளான். மேலும் நான் கட்டுப்படுபவர்களை சார்ந்தவன் ஆவேன்.

அதன் பிறகு அன்னார் தனது மகனான ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: ஹஸனே! நான் உன் தொடர்பாகவும், அனைத்துப் பிள்ளைகள் மற்றும் குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்கள் தொடர்பாகவும் அல்லாஹ்வுக்கு அஞ்சுகின்றேன். மேலும் அல்லாஹ்வை அஞ்சிக் கொண்டிருக்கும்படி வஸிய்யத் செய்கின்றேன். அவனே உங்களின் பராமரிப்பாளன் ஆவான். நீங்கள் இஸ்லாத்தின் நிலையிலேயே இந்த உலகத்தை விட்டு செல்ல வேண்டும். நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாக பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும். உங்களுக்குள் பிரிவினை செய்யக் கூடாது. ஏனென்றால், அபுல் காஸிம் (ஸல்) அவர்களிடமிருந்து நான் இவ்வாறு கேட்டுள்ளேன். அதாவது தங்களுக்குள் சீர்திருத்தம் செய்து கொள்வது நஃபிலான தொழுகைகள் மற்றும் நோன்புகளை விட சிறந்ததாகும்.

இது மிக முக்கியமான விஷயமாகும். இதனை நினைவிற் கொள்ள வேண்டும். தங்களுக்கிடையிலான தொடர்பை சீர்திருத்தம் செய்வது நஃபிலான தொழுகைகள் மற்றும் நோன்புகளை விட சிறந்ததாகும். நீங்கள் சமாதானத்துடன் வசிப்பதும், மக்களை சீர்திருத்தம் செய்வதும் மாபெரும் நன்மைகள் ஆகும். நீங்கள் உங்களது உறவினர்களை கருத்தில் கொள்ளுங்கள். மேலும் அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அதனால் அல்லாஹ் உங்களின் கணக்கின் மீது எளிமையை ஏற்படுத்தி விடுவான். அனாதைகளின் விவகாரத்தில் அல்லாஹ்விற்கு அஞ்சிக் கொண்டிருங்கள். தனது நாவுகளால் அவர்கள் உங்களிடம் உதவி கோர வேண்டும் என்று நீங்கள் அவர்களை நிர்பந்திக்கக்கூடாது. மேலும் உங்களுக்கு முன்னால் அவர்கள் வீணாகி விடுவதற்கு அவர்களை நிர்பந்திக்கக்கூடாது. அண்டை அயலாருக்கான உரிமைகள் தொடர்பாக அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். ஏனென்றால் நீங்கள் உங்களது அண்டை அயலார்களின் உரிமைகளை செலுத்தி வாருங்கள் என்று அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வலியுறுத்தி வந்துள்ளான். எந்த அளவுக்கு என்றால் அண்டை அயலார்களை அல்லாஹ் எனது வாரிசாக்கி விடுவானோ என்ற எண்ணம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்டது.

திருக்குர்ஆன் விவகாரத்தில் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். திருக்குர்ஆனை பின்பற்றும் விவகாரத்தில் மற்றவர் உங்களை முந்திவிடக்கூடாது. தொழுகை விவகாரத்தில் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்.

ஏனெனில் இது உங்களது மார்க்கத்தின் தூண் ஆகும். மேலும் உங்களின் இறைவனின் இல்லம் தொடர்பாகவும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். வாழ்நாள் முழுவதும் அது காலியாக இருப்பதை அனுமதிக்காதீர்கள். ஏனெனில் அதனை நீங்கள் காலியாக விட்டு விட்டால் அதைப்போன்ற இல்லம் ஒன்று உங்களுக்கு கிடைக்காது. அல்லாஹ்வின் வழியில் ஜிஹாத் செய்வது தொடர்பான விவகாரத்திலும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். உங்களது உயிரைக் கொண்டும், செல்வத்தைக் கொண்டும் ஜிஹாத் செய்யுங்கள். மேலும் ஸக்காத் தொடர்பாகவும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். ஏனென்றால் அது இறைவனின் கோபத்தை தணிக்கின்றது.

மேலும் உங்களின் தூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொறுப்புகள் தொடர்பாகவும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். உங்களுக்கு மத்தியில் எவர் மீதும் அநீதி இழைக்கப்படக்கூடாது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகளின் விவகாரங்களிலும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களுக்கு ஆதரவாக வஸிய்யத் செய்துள்ளார்கள். யாசிப்பவர்கள் மற்றும் ஏழைகள் தொடர்பாகவும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். உங்களது வாழ்வியல் பொருட்களில் அவர்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள். அவர்கள் தொடர்பாகவும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். மேலும் உங்களது வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்கள் தொடர்பாகவும் அல்லாஹ்வுக்கு அஞ்சங்கள். அதாவது எவர்களது பொறுப்புகள் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அவர்களது விவகாரங்களிலும் நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்.

தொழுகையை பாதுகாத்துக் கொள்ளுங்கள். தொழுகையை பாதுகாத்துக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக குற்றம்சாட்டுபவரின் எந்த குற்றச்சாட்டிற்கும் அஞ்சாதீர்கள். அல்லாஹ்வின் திருப்தியே கண்முன் இருக்க வேண்டும். மிக முக்கியமான விஷயமாகும். அவன் உங்களுக்கு போதுமானவனாக இருப்பான். எவர் உங்களுக்கு ஏதாவது பாதிப்பை ஏற்படுத்த விரும்புகின்றாரோ மேலும் உங்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்கின்றாரோ அவருக்கு எதிரில் அல்லாஹ் உங்களுக்கு போதுமானவனாக இருப்பான். அல்லாஹ் உங்களுக்கு கட்டளை வழங்கியதுபோன்று மக்களிடம் நன்மையான காரியங்களைப் பேசுங்கள். நன்மையை ஏவுவது மற்றும் தீமையைத் தடுக்கின்ற பணிகளை விட்டு விடாதீர்கள். இல்லையென்றால் உங்களில் மோசமானவர் உங்களுக்கு ஆட்சியாளராகி விடுவார். (நன்மையை ஏவுவதும், தீமையைத் தடுப்பதும் மிக முக்கியமான காரியமாகும். இதில் எப்போதும் நிலைபெற்றிருங்கள். அதனை ஒருபோதும் கைவிட்டு விடாதீர்கள். இல்லையென்றால், உங்களில் மோசமானவர்கள் உங்களின் ஆட்சியாளராக ஆகி விடுவார்கள்). பின்னர் நீங்கள் துஆ செய்வீர்கள். ஆயினும் உங்களது துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படாது.

முஸ்லிம் நாடுகளின் நிலையைப் பாருங்கள். ஒருவர் மற்றவருடன் தொடர்பு வையுங்கள். மேலும் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்யுங்கள். எச்சரிக்கை! ஒருவர் மற்றவருடன் பகைமையில் முன்னேறாதீர்கள். தொடர்பை முறித்துக் கொள்ளாதீர்கள். பிரிவினை செய்யாதீர்கள். நன்மை மற்றும் இறையச்சத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள். பாவம் மற்றும் வரம்பு மீறுதலில் உதவி செய்யாதீர்கள். அல்லாஹ்வின் அச்சத்தை மேற்கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் மிகக் கடுமையாக தண்டனை வழங்குபவன் ஆவான். அஹ்லே பைஅத்தைச் சார்ந்த கண்ணியமான உறுப்பினர்களே! அல்லாஹ் உங்களை பாதுகாப்பானாக. உங்கள் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இறைவன் பாதுகாப்பானாக. அதாவது உங்களது நல்ல முன்மாதிரியின் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்பொழுதும் உயிருடன் இருக்கட்டுமாக. நான் உங்களை அல்லாஹ்விடத்தில் ஒப்படைக்கின்றேன். நான் உங்களுக்கு அமைதியையும், கருணையையும் அல்லாஹ்விடம் வேண்டுகின்றேன்.

(தாரீக் திப்ரி தொகுதி 3 பக்கம் 158 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அபூ சினான் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் காயமுற்றிருந்தபோது அன்னாரை நலம் விசாரிப்பதற்காக சென்றிருந்தேன். அறிவிப்பாளர் கூறுகின்றார்: அமீருல் முஃமினீன் அவர்களே! உங்களது இந்த காயமுற்ற நிலையைப் பார்த்து எங்களுக்கு மிகவும் அச்சம் ஏற்படுகிறது என்று நான் கூறினேன். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஆனால் அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு என்மீது எந்த அச்சமும் இல்லை. ஏனென்றால் உண்மையான தூதராகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் உமக்கு இந்த இந்த இடத்தில் காயங்கள் ஏற்படும் என்று கூறியிருந்தார்கள். அன்னார் தனது பிடரியின் பக்கம் சைகை செய்து காட்டினார்கள். அங்கிருந்து ரத்தம் வடியும். அவ்வாறு செய்யக்கூடியவன் இந்த சமுதாயத்தின் மிகவும் துர்பாக்கியசாலியான மனிதனாக இருப்பான் என்று அன்னார் கூறினார்கள். அதாவது ஒட்டகத்தின் கால்களை வெட்டிய சமூது சமுதாயத்தின் அந்த துர்பாக்கியசாலியான நபரைப்போன்று இந்த செயலை செய்பவனும் துர்பாக்கியசாலியாக இருப்பான்.

(அல்முஸ்தத்ரிக் அலஸ்ஸஹிஹைன் தொகுதி 3 பக்கம் 327 ஹதீஸ் எண் 4648 – 2002 ஆம் ஆண்டு தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தனது கொலையாளியான இப்னு முல்ஜிம் தொடர்பாக இவ்வாறு கூறினார்கள்: அவரை அமரச் செய்யுங்கள். நான் மரணித்து விட்டால் அவரைக் கொலை செய்து விடுங்கள். ஆயினும் அவரது முகத்தை சிதைக்கக்கூடாது. நான் உயிருடன் இருந்தால் அவரை மன்னிப்பது அல்லது பழிவாங்குவது தொடர்பான முடிவை நான் எடுத்துக் கொள்வேன்.

(அல்இஸ்திஆப் தொகுதி 3 பக்கம் 219 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த விஷயத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: வரலாற்றில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை ஒரு மனிதன் கத்தியால் குத்தி தாக்குதல் நடத்தினான். அன்னாரின் வயிற்றை அவன் குத்தி கிழித்தான். மேலும் அவன் பிடிபட்டான். எவ்வாறிருப்பினும் அன்னார் இவ்வாறு எழுதியுள்ளார்கள். வயிற்றில் குத்தினான். தலையிலும் காயம் ஏற்பட்டிருந்தது. ஒருவேளை வயிற்றிலும் ஏற்பட்டிருக்கலாம். அல்லது ஒருவேளை அப்படியொரு எண்ணம் அன்னாருக்கு தோன்றியிருக்கலாம். அல்லது ஒரு சொல் வழக்கில் அன்னார் இவ்வாறு கூறியிருக்கலாம். எவ்வாறிருப்பினும் பெரும்பாலான அறிவிப்புகளில் தலையில் காயம் ஏற்பட்டன என்றே வருகின்றது. கொலையாளி பிடிபட்டான். நாங்கள் இவனுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று சஹாபிகள் கேட்டனர். அப்போது அன்னார் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களை அழைத்தார்கள். ஒருவேளை நான் மரணித்து விட்டால் எனது உயிருக்கு பழிவாங்கும் விதமாக அவனது உயிர் பறிக்கப்படட்டும். ஆயினும் நான் தப்பித்து விட்டால் பின்னர் அவனை கொலை செய்யக்கூடாது என்று கூறினார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 16 பக்கம் 428)

அம்ர் ஸீமுர் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு வாளினால் காயம் ஏற்பட்டபோது நான் அன்னாரிடம் சென்றேன். அன்னார் தனது தலையை சாய்த்து வைத்திருந்தார்கள். அப்போது நான், அமீருல் முஃமினீன் அவர்களே! நீங்கள் உங்களது தலையை காட்டுங்கள் என்று கூறினேன். அன்னார் காயத்தின் மேலிருந்த துணியை எடுத்தார்கள். அப்போது நான், இது சிறிய காயம்தான். மற்றபடி ஒன்றுமில்லை என்று கூறினேன். அதற்கு நான் உங்களிடமிருந்து விடை பெற இருக்கின்றேன் என்று அன்னார் கூறினார்கள். அப்போது அன்னாரின் மகளான உம்மே குல்ஸூம் சாஹிபா திரைக்குப் பின்னால் நின்று கொண்டு அழுது கொண்டிருந்தார்கள். அப்போது அமைதியாகி விடுங்கள். நான் பார்த்துக் கொண்டிருப்பதை நீங்கள் பார்த்தால் நீங்கள் அழமாட்டீர்கள் என்று கூறினார்கள். அப்போது அமீரல் முஃமினீன் அவர்களே! தாங்கள் என்ன கண்டு கொண்டிருக்கின்றீர்கள் என்று நான் கேட்டேன். அதற்கு அன்னார், வானவர்கள் மற்றும் நபிமார்களின் குழுவினர் ஆவர். மேலும் இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆவார்கள். (அதாவது நான் ஒரு காட்சியை கண்டு கொண்டிருக்கின்றேன். அதில் மலக்குகளும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இருந்தார்கள்.) அப்போது அன்னார் (ஸல்) அவர்கள், அலியே! நீங்கள் இன்பமடையுங்கள். ஏனென்றால், நீங்கள் இருக்கின்ற இடத்தை விட நீங்கள் செல்கின்ற இடம் சிறந்ததாகும் என்று கூறினார்கள்.

மற்றோர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தனது வஸிய்யத்தை எழுதி முடித்த பிறகு நான் அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹூ கூறுகிறேன் என்று கூறினார்கள். அதன் பிறகு லாயிலாஹா இல்லல்லாஹ் என்ற கலீமாவைத் தவிர வேறு எதனையும் அன்னார் கூறவில்லை. எந்த அளவுக்கு என்றால் அன்னாரின் ரூஹ் கைப்பற்றப்பட்டது.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 114,115 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலீ பின் அபீ தாலிப் அவர்களின் மரணம் நிகழ்ந்த பிறகு ஹஸ்ரத் ஹஸன் பின் அலீ அவர்கள் மேடையின் மீது ஏறி நின்றார்கள். மேலும் கூறினார்கள்: மக்களே! இன்று இரவு எப்படிப்பட்ட ஒரு நபரின் மரணம் நிகழ்ந்துள்ளது என்றால், இதற்கு முன் சென்ற மக்களில் எவரும் அவரை முந்த முடியாது. பின்னர் வரக்கூடிய நபர்களில் எவரும் அன்னாரின் அந்தஸ்தை அடைய முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அன்னாரை ஒரு திட்டத்திற்காக அனுப்பி வைக்கும்போது வலப்புறம் ஜிப்ரீல் (அலை) அவர்களும், இடப்புறம் மீக்காயீல் அவர்களும் இருந்து வந்தார்கள்.

அன்னாரது கரத்தில் அல்லாஹ் வெற்றியை வழங்காதவரை அன்னார் திரும்பி வந்தது கிடையாது. அன்னார் வெறும் 700 திர்ஹம்களை மட்டுமே சொத்தாக விட்டுச் சென்றுள்ளார்கள். இந்த தொகையைக் கொண்டு அடிமையை வாங்க வேண்டும் என்று அன்னார் எண்ணம் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் ரூஹ் உயர்த்தப்பட்ட நாளன்றே அன்னாரின் ரூஹ் கைப்பற்றப்பட்டது. அதாவது ரமலானின் அருளுக்குரிய 27ம் இரவு அன்று அன்னார் மரணமடைந்தார்கள்.

மற்றோர் அறிவிப்பில் உள்ளது. அதில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவம் ஹிஜ்ரி 40 ஆம் ஆண்டு ரமலானின் 27ம் தேதி நிகழ்ந்ததாக கூறப்பட்டுள்ளது. ஆக இது ஹிஜ்ரி 40வது ஆண்டாக இருந்தது. 4 ஆண்டுகள் மற்றும் எட்டரை மாதங்கள் வரை அன்னாரின் கிலாஃபத் காலக்கட்டம் நிலைபெற்றிருந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 28 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துரைக்கின்றார்கள். தப்காத் இப்னு சஅத் தொகுதி 3ல் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் மரணம் தொடர்பான சூழ்நிலை பற்றி ஹஸ்ரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பு இடம் பெற்றுள்ளது. அன்னார் கூறினார்கள்: மக்களே! இன்று எத்தகைய நபர் மரணித்திருக்கின்றார் என்றால் அவரது சில விஷயங்களை இதற்கு முன் எவரும் அடைந்ததில்லை. இனி வருபவர் எவரும் அடையப்போவதுமில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அன்னாரை போருக்கு அனுப்பி வைக்கின்றபோது ஜிப்ராயீல் (அலை) அவர்கள் அன்னாரின் வலப்பக்கமும், மீக்காயீல் (அலை) அவர்கள் அன்னாரின் இடப்பக்கமும் இருந்து வந்தார்கள். எனவே அவர்கள் வெற்றி பெறாமல் திரும்பி வந்தது கிடையாது. அன்னார் வெறும் 700 திர்ஹம்களை மட்டுமே தனது சொத்தாக விட்டுச் சென்றார்கள். அதைக் கொண்டு ஓர் அடிமையை விலைக்கு வாங்க அன்னார் எண்ணியிருந்தார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் ஆன்மா விண்ணிற்கு உயர்த்தப்பட்ட அதே இரவு அன்னார் மரணமடைந்தார்கள். அதாவது ரமலான் மாதத்தின் 27ம் தேதி அன்னார் மரணமடைந்தார்கள்.

(தஃவத்துல் அமீர், அன்வாருல் உலூம் தொகுதி 7 பக்கம் 348)

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை அன்னாரின் இரண்டு மகன்களும், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஃபர் (ரலி) அவர்களும் நீராட்டினார்கள். அன்னாரின் மகனான ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் அன்னாரின் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். ஜனாஸா தொழுகையில் நான்கு தக்பீராத்துகள் கூறப்பட்டன. அன்னாருக்கு மூன்று கஃபன் ஆடைகள் அணிவிக்கப்பட்டன. அதில் சட்டை இடம் பெறவில்லை. அன்னாரின் நல்லடக்கம் சஹ்ரி நேரத்தில் நடைபெற்றது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் அருளுக்காக கொஞ்சம் கஸ்தூரி இருந்தது என்று கூறப்படுகிறது. அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உடலில் தடவி வந்த கஸ்தூரியில் எஞ்சியதாக இருந்தது. அந்த கஸ்தூரியை தனது மையத்தின் மீது தடவ வேண்டும் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் வஸிய்யத் செய்திருந்தார்கள்.

அன்னாரின் வயது குறித்து கருத்து வேறுபாடு காணப்படுகிறது. சிலர் அன்னாருக்கு 57 வயது இருந்தது என்றும், சிலரது பார்வையில் 58 வயது என்றும், வேறு சிலரைப் பொருத்தவரை 65 வயது என்றும் கூறப்பட்டுள்ளது. இன்னும் சிலரைப் பொருத்தவரை 63 வயது என்றும் கூறப்படுகின்றது. இருப்பினும் பெரும்பாலானவர்களின் பார்வையில் 63 வயதே சரியானதாக உள்ளது. (அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 115 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கபர் எங்கு உள்ளது? இது தொடர்பாக கேள்வி எழுகின்றது. அது பற்றி வரலாற்று புத்தகங்களில் பல்வேறு அறிவிப்புகள் கிடைக்கின்றன. அவை இவ்வாறாகும்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் இரவு நேரத்தில் கூஃபாவில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அன்னாரின் நல்லடக்கம் மறைவாக வைக்கப்பட்டது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூஃபாவின் ஒரு பெரிய பள்ளிவாசலில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். ஹஸ்ரத் இமாம் ஹஸன் (ரலி) மற்றும் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் உடலை மதீனாவிற்கு கொண்டு வந்தார்கள். மேலும் ஃபாத்திமா அவர்களின் கபருக்கு அருகில் பகீஃ என்ற இடத்தில் நல்லடக்கம் செய்தார்கள்.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. அவர்கள் இருவரும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் உடலை ஒரு பெட்டியில் வைத்து ஒரு ஒட்டகத்தில் வைத்தபோது ஒட்டகம் மறைந்து விட்டது. அந்த ஒட்டகத்தை தே எனும் கோத்திரத்தார் பிடித்தனர். அவர்கள் அந்தப் பெட்டியில் செல்வம் இருக்கும் என எண்ணினர். அந்தப் பெட்டியில் உடல் இருப்பதைப் பார்த்து அவர்களால் அதனை அடையாளங்கண்டு கொள்ள முடியவில்லை. அவர்கள் அந்த பெட்டியுடனேயே அன்னாரை நல்லடக்கம் செய்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கபர் எங்குள்ளது என்று யாருக்கும் தெரியாது. பின்னர் மற்றோர் அறிவிப்பு வருகின்றது. ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை கூஃபாவில் ஜஃதா பின் ஹுபைரா குடும்பத்தினரின் ஓர் அறையில் நல்லடக்கம் செய்து விட்டார்கள். ஜஃதா என்பவர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் மருமகனாக இருந்தார் என்று கூறப்படுகின்றது.

இமாம் ஜஃபர் சாதிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் ஜனாஸா தொழுகை இரவு நேரத்தில் தொழ வைக்கப்பட்டது. கூஃபாவில் அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அன்னாரின் கபர் இருக்கும் இடம் மறைவாக வைக்கப்பட்டது. எனினும் அது கிஸ்ரா நாட்டிற்கு அருகில் இருந்தது.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்கள் அன்னாரின் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். கூஃபா நகரத்திற்கு வெளியில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அன்னாரின் கபர் இரகசியமாக வைக்கப்பட்டது. காரிஜ்கள் (வெளியேறியவர்கள்) அன்னாரின் கபரை அவமரியாதை செய்துவிடக்கூடாது என்பதற்காக இரகசியமாக வைக்கப்பட்டது.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கபர் நஜஃப் நகரத்தில் இருப்பதாக சில ஷியாக்கள் கூறுகின்றனர். அந்த நகரத்தை தற்போதைய காலத்தில் முஷ்ஹதுன் நஜஃப் என்று கூறுகின்றனர்.

ஓர் அறிவிப்பிற்கேற்ப கூஃபா நகரத்தில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். எனினும் அன்னாரின் கபர் எங்கு உள்ளது என்பது எவருக்கும் தெரியாது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். மேலும் தலைநகரமான கூஃபாவில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். காரிஜ்கள் அன்னாரின் உடலை அவமரியாதை செய்து விடுவார்கள் என்ற அச்சம் இருந்தது.

அல்லாமா இப்னு அஸீர் அவர்கள் எழுதுகின்றார்கள்: இந்த அறிவிப்பு மிகவும் பிரபல்யமானதாகும். அன்னாரின் உடல் விலங்கின் மீது வைக்கப்பட்டது. அந்த விலங்கு அன்னாரை சுமந்து சென்றது. ஆனால் அது எங்கே சென்றது என்பது யாருக்கும் தெரியாது என்று கூறப்படும் அறிவிப்பு சரியானதல்ல. அவர் இது தொடர்பாக தவறிழைத்துள்ளார். அவருக்கு இது தொடர்பாக எந்த அறிவும் இல்லை. இந்த கருத்தை ஷீஅத்தும் ஏற்கவில்லை. பெரும்பாலான அறிவீனர்களும், நிராகரிப்பவர்களும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கபர் மஷ்ஹதுன் நஜஃப் என்ற இடத்தில் இருப்பதாக நம்புகின்றனர். அதற்கு எந்த ஆதாரமும் இல்லை. அதில் எந்த உண்மையும் இல்லை. மேலும் அங்கே ஹஸ்ரத் முகீரா பின் ஷுஃபா அவர்களின் கபர்தான் உள்ளது என்று கூறப்படுகிறது.

(தாரீக் திப்ரி தொகுதி 3 பக்கம் 477 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இமாம் இப்னு தீமியா கூறுகின்றார்கள்: நஜஃப் நகரத்தில் மஷ்ஹது என்ற பெயருடைய இடம் உள்ளது. அங்கு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கபர் இல்லை என்பதை அறிஞர்கள் ஒப்புக் கொள்கின்றனர். மாறாக, அங்கு ஹஸ்ரத் முகீரா பின் ஷுஃபா (ரலி) அவர்களின் கபரே உள்ளது. அஹ்லே பைஅத், ஷியாக்கள் மற்றும் ஏனைய முஸ்லிம்கள் கூஃபாவில் அவர்களின் அரசாங்கம் 300 ஆண்டுகளை விட அதிகமாக இருந்தது என்பதை அறிந்தும் கூட இது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கபர் ஆகும் என்று அவர்கள் குறிப்பிடவில்லை. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவம் நிகழ்ந்த 300 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த இடத்தை மஷ்ஹதே அலீ என்று கூறப்படுகிறது. எனவே இது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கபர் ஆகும் என்ற அறிவிப்பு முற்றிலும் தவறாகும்.

(என்ஸைகிலோபீடியா, சீரத் சஹாபா கராம் தொகுதி 1 பக்கம் 436)

ஹஸ்ரத் அல்லாமா இப்னு ஜவ்ஸி அவர்கள் தனது வரலாற்று நூலில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கபர் தொடர்பாக பல்வேறு அறிவிப்புகளை செய்துள்ளார்கள். அது ஏற்கனவே எடுத்துக் கூறப்பட்டு விட்டது.

தொடர்ந்து அன்னார் எழுதுகின்றார்கள்: وَاللّٰهُ اَعْلَمُ اَیُّ الْاَقْوَالِ اَصَحُّ

அதாவது எந்த கூற்று சரியானது என்பதை அல்லாஹ்வே நன்கறிவான்.

(அல்முன்தஸிம் தொகுதி 5 பக்கம் 178 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் திருமணம் மற்றும் அவர்களின் சந்ததிகள் தொடர்பான நற்குறிப்பு இவ்வாறு கிடைக்கின்றது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் பல்வேறு தருணங்களில் 8 திருமணங்கள் செய்தார்கள்.

அவர்களின் பெயர் இவ்வாறாகும்: ஃபாத்திமா பின்த் ரஸூல் (ஸல்), ஹவ்லா பின்த் ஜாஃபர் பின் கைஸ், லைலா பின்த் மஸ்ஊது பின் காலித், உம்முல் பனீன் பின்த் ஸிஸாம் பின் காலித், அஸ்மா பின்த் உமைஸ், ஷஹ்பா உம்மே ஹபீப் பின்த் ரபியா, உமாமா பின்த் அபுல் ஆஸ் பின் ரபீ. இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகளாகிய ஹஸ்ரத் ஸைனப் அவர்களின் மகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகள்வழிப் பேத்தியும் ஆவார்கள். உம்மே சயீத் பின்த் உர்வா பின் மசூது சக்ஃபி அவர்கள் ஆவார்கள். அல்லாஹ் இவர்களுக்கு பெரும் சந்ததிகளை வழங்கினான். அவர்களின் எண்ணிக்கை 30 ஐ விட அதிகமாகும். 14 மகன்களும், 19 மகள்களும் ஆவர். அன்னாரின் சந்ததி ஹஸ்ரத் ஹஸன் (ரலி), ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி), முஹம்மது பின் ஹனஃபியா, அப்பாஸ் பின் கலாபியா மற்றும் அம்ர் பின் தக்லபியா ஆகியோர் மூலம் அன்னாரின் சந்ததி தொடர்ந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 14 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுயில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் சிறப்புகள் மற்றும் நற்பண்புகள் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நான் அறிவின் நகரம் ஆவேன். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அதன் வாசல் ஆவார்கள். எவர் அந்த நகரத்தை அடைய எண்ணம் கொள்வாரோ அவர் முதலில் அந்த வாசலை வந்தடைய வேண்டும்.

(அல்முஸ்தத்ரிக் அலஸ்ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 339 ஹதீஸ் எண் 4695 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: சஹாபிகளில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிகவும் வீரராகவும், தைரியசாலியாகவும் இருந்தார்கள். பதர் போர் நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக தனியாக அறை ஒன்று தயார் செய்யப்பட்டது. அப்போது இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதுகாப்பு பணியை யாரிடம் ஒப்படைப்பது என்ற கேள்வி எழுந்தது. அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், உடனடியாக வாளை ஏந்தி நின்று கொண்டார்கள். அன்னார் அபாயம் நிறைந்த அந்த சந்தர்ப்பத்திலும் மிக தைரியத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதுகாப்பு பணியை செய்தார்கள்.

இதேபோன்று ஹதீஸில் வந்துள்ளது. ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நான் அறிவின் நகரம் ஆவேன். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அதன் வாசல் ஆவார்கள் என்று கூறினார்கள்.

எனவே ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலமாவைச் சார்ந்தவராக குறிப்பிட்டுள்ளார்கள். ஆயினும் கைபர் போரின் மிக நுட்பமான தருணத்தில் இஸ்லாத்தின் கொடியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரின் கரங்களிலேயே ஒப்படைத்தார்கள். இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்த உலமா பெருமக்கள் கோழையாக இருந்ததில்லை. மாறாக, எல்லாரையும் விட மிக தைரியசாலியாக இருந்தார்கள். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 7 பக்கம் 364,365)

இங்கு ஆலிம்களின் தைரியம் பற்றி அன்னார் குறிப்பிடுகின்றார்கள் எனவே இது தொடர்பாக இந்த சம்பவத்தை அன்னார் எடுத்துரைத்தார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஒரு நேரத்தில் நான் எனது வயிற்றில் பசியின் காரணமாக கற்களை கட்டியிருந்தேன். இன்று எனது சதகா அதாவது ஸக்காத் என்பது 7000 தினார்களை தொட்டு விட்டது. மற்றோர் அறிவிப்பில் 40000 தினார்கள் என்றும் வந்துள்ளது.

அபூபஹ்ர் தனது ஓர் ஆசிரியரிடமிருந்து அறிவிக்கின்றார்கள். அவர் கூறினார்: நான் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை எளிதான சட்டை ஒன்றை அணிந்து வந்ததை கண்டேன். இதனை ஐந்து திர்ஹம் கொடுத்து வாங்கியதாக அன்னார் கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: நான் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் சில தினார்களைக் கொண்ட பை ஒன்றை கண்டேன். அப்போது அன்னார் இது யம்பூ மக்களின் சொத்துக்களிலிருந்து எமக்கு எஞ்சிய செல்வமாகும் என்று கூறினார்கள். யம்பூ என்பது மதீனாவிலிருந்து 7 மைல் தொலைவிலுள்ள மேலும் கடற்கரை பக்கத்திலுள்ள அமைந்துள்ள ஓர் ஊர் ஆகும். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் மோதிரத்தில் அல்லாஹு அல் மலிக் அதாவது அல்லாஹ்வே அரசன் ஆவான் என பதிக்கப்பட்டிருந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 22 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஜமீஃ பின் உமைர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடத்தில் எனது சிற்றன்னையுடன் சென்றனே. அப்போது அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மக்களில் மிகவும் அன்பிற்குரியவர் யாராக இருந்தார்? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) என்று கூறினார்கள். ஆண்களில் யார்? என்று அன்னாரிடம் கேட்கப்பட்டது. அதற்கு, ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் கணவரான ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஆவார்கள் என்று அன்னார் கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3874)

ஹஸ்ரத் சஃலபா பின் அபீ மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சஅத் பின் உதாபா ஒவ்வொரு போர் மைதனாத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சார்பாக கொடி ஏந்தி நின்றார்கள். ஆனால் போருக்கான நேரம் வந்தபோது ஹஸ்ரத் அலீ பின் அபீ தாலிப் அவர்கள் கொடியை பெற்றுக் கொண்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 93 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

சகீஃப் கோத்திரத்தின் ஒரு நபர் கூறுகின்றார்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் என்னை சாபூர் பகுதியின் பொறுப்பாளராக நியமனம் செய்தார்கள். சாபூர் என்பது ஃபாரிஸின் ஒரு முக்கிய பகுதியாகும். மேலும் கூறினார்கள்: ஒரு திர்ஹம் வரியின் காரணமாக எவருக்கும் சவுக்கடி கொடுக்கக்கூடாது. மக்களின் செல்வங்களை பின் தொடரக்கூடாது. குளிர்காலங்களிலும், கோடை காலத்திலும் அவர்களது ஆடைகளையும் பின் தொடரக்கூடாது. அவர்களின் ஆடைகள் அவிழ்ந்து விடும் அளவிற்கு அவர்களிடமிருந்து வரி வசூலிக்கக்கூடாது. மேலும் அவர்கள் பயன்படுத்தி வருகின்ற விலங்களுக்கு பகரமாக விலங்குகளை கேட்கக்கூடாது. எவரையும் ஒரு திர்ஹம் பணத்தை பெறுவதற்காக நிற்க வைக்கக்கூடாது. அதாவது என்ன வரியை வசூல் செய்தாலும் ஜிஸ்யாவாக வசூல் செய்ய வேண்டும். மக்கள் மீது எந்த சுமையும் சுமத்தக்கூடாது. அவர்களுக்கு எந்த கஷ்டத்தையும் கொடுக்கக்கூடாது. அப்போது அமீருல் முஃமினீன் அவர்களே! அவ்வாறென்றால் நான் வெறும் கையுடன்தான் திரும்ப நேரிடும். நான் உங்களிடமிருந்து செல்கின்ற நிலையிலேயே திரும்பி வந்து விடுவேன் என்று கூறினேன். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், நல்லது. அப்படியே ஆகட்டும் என்று கூறினார்கள். நீங்கள் வெறும் கையுடன் திரும்ப நேரிட்டாலும் மக்களின் தேவைகளுக்கு அதிகமான செல்வத்திலிருந்தே வரி வசூல் செய்யும்படியே நமக்கு கட்டளை உள்ளது. (மஜ்மவுல் பல்தான் தொகுதி 3 பக்கம் 188)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நீர் எமது சகோதரரும், எமது தோழரும் ஆவீர் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 13 பக்கம் 109 ஹதீஸ் எண் 36356 – 1981 ஆம் ஆணடு அச்சிடப்பட்டது)

அலீ பின் ரபீஆ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் இருந்தேன். அவர்கள் அதில் பயணமாகும் பொருட்டு அவர்களுக்காக ஒரு விலங்கு கொண்டு வரப்பட்டது. அன்னார் அதில் ஏறி அமர கால் வைத்தபோது மூன்று முறை பிஸ்மில்லாஹ் என்று கூறினார்கள். மேலும் அந்த விலங்கின் முதுகில் நேராக அமர்ந்து விட்ட பிறகு அல்ஹம்துலில்லாஹ் என்று கூறினார்கள். அதன் பிறகு இவ்வாறு கூறினார்கள்: இந்த விலங்கை நமக்கு தொண்டுக்காக படைத்த இறைவன் தூயவன் ஆவான். நாம் எந்த ஆற்றலும் பெற்றிருக்கவில்லை. பின்னர் நாம் அந்த இறைவன் பக்கமே திரும்பிச் செல்ல இருக்கின்றோம். பின்னர் அன்னார் மூன்று முறை அல்ஹம்துலில்லாஹ் என்றும், பின்னர் அல்லாஹு அக்பர் என்று மூன்று முறையும் கூறினார்கள். அதன் பிறகு இவ்வாறு துஆ செய்தார்கள்: இறைவா! நீ தூயவன். நிச்சயமாக நானே என் ஆன்மாவின் மீது அநீதி இழைத்துள்ளேன். எனவே என்னை மன்னித்து விடு. ஏனென்றால் உன்னைத்தவிர பாவங்களை மன்னிப்பவன் வேறு எவனும் இல்லை. அதன் பிறகு அன்னார் புன்னகைத்தார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அமீருல் முஃமினீன் அவர்களே! தாங்கள் எதன் காரணமாக புன்னகைத்தீர்கள்? என்று நான் கேட்டேன். அதற்கு நான் இவ்வாறு செய்ததைப்போன்றே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்ததை நான் கண்டேன் என்று கூறினார்கள். அன்னார் புன்னகைத்தார்கள். பின்னர் நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எதன் காரணமாக நீங்கள் புன்னகைக்கின்றீர்கள்? என்று நான் கேட்டேன் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு, உமது இறைவன் தனது அடியார்களிடம் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எனது இறைவா! எனது பாவங்களை மன்னிப்பாயாக. நிச்சயமாக உன்னைத்தவிர பாவங்களை மன்னிப்பவன் வேறு எவனும் இல்லை என்று அடியான் கூறும்போது இறைவன் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றான். அதன் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் புன்னகைத்தார்கள்.

(ஜாமி திர்மிதி, அப்வாபுத் தஃவாத் ஹதீஸ் எண் 3446)

யஹ்யா பின் யாமிர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் அலீ பின் அபீ தாலிப் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனது மகிமையை எடுத்துரைத்த பிறகு, மக்களே! உங்களுக்கு முன் சென்ற மக்கள் பாவங்கள் செய்ததன் காரணமாகவே அழிவிற்கு ஆளாகினர் என்று கூறினார்கள். அவர்களின் நன்மக்களும், உலமாக்களும் அவர்களை தீமையிலிருந்து தடுக்கவில்லை. மேலும் அவர்கள் பாவங்களில் வரம்புமீறியபோது அவர்களை பலதரப்பட்ட தண்டனைகள் பிடித்து விட்டன. எனவே உங்கள் மீதும் அதுபோன்ற தண்டனைகள் வருவதற்கு முன்பாக நீங்கள் மக்களுக்கு நன்மையை ஏவுங்கள். மேலும் அவர்களை தீமையிலிருந்து தடுத்து நிறுத்துங்கள். நன்றாக நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் நன்மையை ஏவுவதும், தீமையிலிருந்து தடுப்பதும் உங்களின் செல்வத்தையும் குறைத்து விடாது; உங்களை மரணத்திற்கு அருகிலும் கொண்டு சென்று விடாது.

(தஃப்ஸீருல் குர்ஆனுல் அலீம் தொகுதி 3 பக்கம் 132 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஓர் அன்ஸாரி பெண்மணியின் வீட்டில் நாங்கள் அமர்ந்திந்தோம். அந்தப் பெண்மணி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக உணவு சமைத்து விருந்திற்கு அழைத்திருந்தார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இப்போது உங்களிடத்தில் சொர்க்கத்திற்குரிய ஒருவர் வருவார் என்று கூறினார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தார்கள். நாங்கள் அன்னாருக்கு வாழ்த்துக்களை தெரிவித்தோம். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இப்போது உங்களிடம் மேலும் ஒரு சொர்க்கத்திற்குரியவர் வருகை தருவார் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வருகை தந்தார்கள். நாங்கள் அவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்தோம். பிறகு மூன்றாவது முறையாக இப்போது மேலும் ஒரு சொர்க்கத்திற்குரியவர் உங்களிடம் வருகை தருவார் என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: நான் அந்த நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது தலையை பேரீத்தம் பழ செடியின் கீழே மறைந்திருந்ததைக் கண்டேன். மேலும் அல்லாஹ்வே! நீ நாடினால் வரக்கூடியவர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களாக இருக்கட்டும் என்று கூறிக் கொண்டிருந்தார்கள். பின்னர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் வருகை தந்தார்கள். அப்போது நாங்கள் அன்னாருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தோம்.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 107 ஹதீஸ் எண் 14604 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: சுவர்க்கம் மூன்று நபர்களைக் கொண்டுள்ளது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அந்த மூன்று நபர்கள், அலீ, அம்மார் மற்றும் சல்மான் ஆகியோர் ஆவர்.

(அல்முஸ்தத்ரிக் அலஸ்ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 348 ஹதீஸ் எண் 4724 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

அபூ உஸ்மான் நஹ்தி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது கைகளை பிடித்திருந்தார்கள். நாங்கள் மதீனாவின் ஒரு வீதியைக் கடந்து ஒரு தோட்டத்தை சென்றடைந்தோம். அப்போது நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இந்த தோட்டம் எவ்வளவு அழகாக உள்ளது என்று கூறினேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், சொர்க்கத்தில் இதை விட அழகிய தோட்டம் உங்களுக்கு உள்ளது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அம்மார் பின் யாஸர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் இவ்வாறு கூறக் கேட்டேன். அலீயே! அல்லாஹ் உங்களுக்கு சிறப்பு ஒன்றை வழங்கியுள்ளான். அதை விட மேலான சிறப்பை அவன் தனது அடியாருக்கு வழங்கியதில்லை. அது என்னவென்றால், உலகத்தில் விருப்பமின்மை என்பதாகும். அல்லாஹ் உம்மை எப்படி படைத்துள்ளான் என்றால், நீர் உலகிலிருந்து எதையும் பெறுவதுமில்லை. உலகமும் உம்மிடமிருந்து எதையும் பெறுவதுமில்லை. அதாவது நீர் உலகில் எந்த விஷயத்தின் மீதும் ஆசை கொண்டதில்லை. உலகப் பொருட்களை விரும்பியதில்லை. மேலும் உலக ஆசைகள் கொண்ட எவரும் உம்முடன் தொடர்பு வைக்க விரும்பியதும் இல்லை. மேலும் உமக்கு அல்லாஹ் ஏழைகளின் மீதான அன்பை வழங்கியுள்ளான். மேலும் அவர்கள் உம்மை தமது இமாமாக ஆக்கி மகிழ்ச்சியாக உள்ளனர். மேலும் நீரும் அவர்களை உமது சீடர்களாகக் கண்டு மகிழ்ச்சியடைந்துள்ளீர். எனவே எவர் உம்மை நேசிக்கின்றாரோ அவருக்கும் உம்மைப் பற்றி உண்மை பேசுபவருக்கும் நற்செய்தி உண்டாகட்டுமாக. எவர் உம்மீது பகைமை கொள்வாரோ அவருக்கு நாசம் உண்டாகட்டும். உமக்கு எதிராக பொய் பேசுபவருக்கும் நாசம் உண்டாகட்டும். உம்மீது நேசம் கொள்பவரையும், உம்மைப் பற்றி உண்மை பேசுபவரையும் சொர்க்கத்தில் உமது வீட்டின் அண்டை அயலாராகவும், உமது மாளிகையில் உமது தோழராகவும் இருப்பர். மேலும் உம்மீது பகைமை கொள்பவரையும் உமக்கு எதிராக பொய்யை புனைந்து பேசுபவரையும் கியாமத் நாளன்று அல்லாஹ் கடுமையாக பொய் பேசுபவர்களின் இடத்தில் நிற்கச் செய்வான். இதனை அல்லாஹ் தனது பொறுப்பில் எடுத்துள்ளான்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 96,97 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுவர்க்கத்தில் அந்தஸ்து பற்றி கூறினார்கள்: அதில் அலியும், ஃபாத்திமாவும் இருப்பார்கள். சுவர்க்கத்திற்குரிய நற்செய்தி பெற்ற பத்து நபர்களில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றார்கள்.

(பரகாத்தே கிலாஃபத், அன்வாருல் உலூம் தொகுதி 2 பக்கம் 254)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தனது நாவினால் சுவர்க்கத்திற்கு நற்செய்தி வழங்கிய நற்பேறு பெற்ற சஹாபாக்களில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் ஒருவர் ஆவார்கள்.

ஹஸ்ரத் சயீத் பின் ஸைது அறிவிக்கின்றார்கள்: நான் பத்து நபர்கள் தொடர்பாக அவர்கள் சுவர்க்கவாசிகள் என்பதற்கு சாட்சியம் பகர்கின்றேன். பத்தாவது நபர் தொடர்பாகவும் கூறுகின்றேன். அவர் பாவம் செய்தவராக இருக்க மாட்டார். அது எப்படி என கேட்கப்பட்டது. அதற்கு அவர், நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஹிரா குன்றின் மீது அமர்ந்திருந்தோம். அப்போது அது அசைந்தது. அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிராவே! நில். நிச்சயமாக உன்மீது ஒரு நபியும், ஒரு சித்தீக்கும், ஒரு ஷஹீதும் இருக்கின்றார் என்று கூறினார்கள்.

அப்போது சுவர்க்கத்திற்குரிய அந்த பத்து நபர்கள் யார்? என்று கேட்கப்பட்டது. ஹஸ்ரத் சயீத் பின் ஸைத் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்), ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலீ (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் ஸுபைர் (ரலி), ஹஸ்ரத் சஅத் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் ஆகியோர் ஆவர். பத்தாவது நபர் யார் என்று கேட்கப்பட்டது. அதற்கு சயீத் பின் ஸைத் அவர்கள், நான் என்று கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3757)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துரைத்துள்ள இந்த சம்பவத்தை இதற்கு முன்பும் நான் கூறியுள்ளேன். அதாவது நஃப்ஸின் மீது ஆதிக்கம் செலுத்துபவர் மற்றும் தற்பெருமையிலிருந்து விலகியவர் தொடர்பாக குறிப்பிட்டுள்ளேன். எனவே நான் மீண்டும் இங்கு எடுத்துரைக்கின்றேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஒரு எதிரியிடம் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். இறைவனுக்காக மட்டுமே சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். இறுதியில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனை கீழே வீழ்த்தி விட்டார்கள். அவனது நெஞ்சில் ஏறி அமர்ந்து விட்டார்கள். அவன் உடனடியாக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் முகத்தில் உமிழ்ந்து விட்டான். அப்போது உடனே ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனது நெஞ்சிலிருந்து கீழே இறங்கி விட்டார்கள். மேலும் அவனை விட்டு விட்டார்கள். நான் இதுவரை இறைவனுக்காக மட்டுமே உம்முடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் இப்போது நீர் எனது முகத்தில் உமிழ்ந்து விட்டீர். எனவே இப்போது எனது நஃப்ஸின் விருப்பமும் இதில் கலந்து விட்டது. எனவே நான் எனது நஃப்ஸிற்காக உம்மை கொலை செய்ய விரும்பவில்லை என்று கூறினார்கள்.

இதிலிருந்து தெளிவாக தெரிவது என்னவென்றால், அன்னார் தனது நஃப்ஸின் எதிரியை எதிரியாக கருதவில்லை. இதுபோன்ற இயல்பையும், பழக்கத்தையும் நம்மிடத்தில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜமாஅத்திற்கு அறிவுரை செய்கின்றார்கள். நஃப்ஸின் பேராசை மற்றும் நோக்கங்களுக்காக ஒருவரைப் பார்த்து அவருடனான பகைமையின் தொடர் நீண்டு கொண்டிருக்குமென்றால் அதைவிட இறைவனை கோபப்படுத்துகின்ற காரியம் வேறு என்னவாக இருக்க முடியும்?

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 105)

மற்றோர் சந்தர்ப்பத்தில் விளக்கமாக அன்னார் எடுத்துரைத்தார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: நஃப்ஸின் உணர்வுகள் மற்றும் இறைவனுக்கான உணர்வுகள் ஆகிய இரண்டிற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை அறிய ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் ஒரு சம்பவத்திலிருந்து நீங்கள் படிப்பினை பெற்றுக் கொள்ளுங்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் நிராகரிப்பாளரான ஒரு வீரருடன் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். மீண்டும் மீண்டும் அவனை வீழ்த்த முற்பட்டார்கள். ஆனால் அவன் தப்பித்துக் கொண்டிருந்தான். இறுதியில் அவனைப் பிடித்து அவனை நன்றாக வீழ்த்தி விட்டார்கள். அவனது நெஞ்சில் ஏறி அமர்ந்து கொண்டார்கள். கத்தியால் அவனது கதையை முடிக்க இருந்தார்கள். அந்த நேரத்தில் அவன் அன்னாரின் முகத்தில் உமிழ்ந்து விட்டான். அவன் அந்த செயலை செய்தபோது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனது நெஞ்சிலிருந்து எழுந்து விட்டார்கள். மேலும் அவனை விட்டு விட்டார்கள். மேலும் அவனிடமிருந்து விலகி விட்டார்கள். அதனைக் கண்டு அவன் ஆச்சரியப்பட்டான்.

மேலும் அவன் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம், நீங்கள் இவ்வளவு கஷ்டப்பட்டு என்னை பிடித்தீர்கள். நான் உங்களின் எதிரி ஆவேன். உங்களை கொலை செய்யத் துடிப்பவன் ஆவேன். அவ்வாறிருந்தும் நீங்கள் என்னை வீழ்த்திய பிறகும் இப்போது நீங்கள் என்னை விட்டு விட்டீர்களே! என்ன விஷயம்? என்று கேட்டான். அதற்கு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், எமக்கு உம்முடன் எந்த தனிப்பட்ட பகைமையும் இல்லை. நீர் மார்க்கத்தை எதிர்ப்பதன் காரணமாக முஸ்லிம்களுக்கு துன்பம் கொடுத்து வந்தீர். எனவே நீர் கொலை செய்யப்பட வேண்டியவராக இருந்தீர். எனவே நான் மார்க்கத் தேவைகளின் காரணமாக உம்மை பிடித்தேன். ஆனால் நீர் எனது முகத்தில் உமிழ்ந்து விட்ட பிறகு எனக்கு கோபம் வந்து விட்டது. மேலும் நமக்கிடையில் மன இச்சைகள் வந்து விட்டதாக நான் எண்ணினேன். எனவே நான் எனது நஃப்ஸிற்காக எந்தப் பணியையும் செய்ய விரும்பவில்லை. அதை நான் ஆகுமானதாக கருதவில்லை. நான் அனைத்தையும் இறைவனுக்காகவே செய்ய விரும்புகின்றேன் என்று கூறினார்கள். மேலும் எனது இந்த நிலையில் மாற்றம் வந்த பிறகு மேலும் எனது கோபம் அகன்று விட்ட பிறகு உம்முடன் அதேபோன்று நான் நடந்து கொள்வேன் என்று கூறினார்கள்.

இதனை செவியுற்ற அந்த நிராகரிப்பாளரின் உள்ளத்தில் எப்படிப்பட்ட தாக்கம் ஏற்பட்டதென்றால், அவரது உள்ளத்திலிருந்த அனைத்து நிராகரிப்பும் வெளியேறி விட்டது. உலகில் இதைவிட சிறந்த மார்க்கம் வேறு என்னவாக இருக்க முடியும் என அவர் சிந்தித்தார். இந்த மார்க்கத்தின் போதனையின் தாக்கத்தால் மனிதன் இதுபோன்ற தூய மனதுடையவனாக ஆகி விடலாம் என்று அவர் உணர்ந்தார். எனவே அவர் அப்போதே தவ்பா செய்தார். மேலும் முஸ்லிமாகி விட்டார். (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 219)

எனவே விளைவை ஏற்படுத்துகின்ற அசல் இறையச்சம் என்பது இதுவே ஆகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் அந்த யூதருடனான ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் சண்டை தொடர்பான சம்பவத்தை இவ்வாறே ஏறக்குறைய எடுத்துரைக்கின்றார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஒரு போரில் பங்கு பெற்றிருந்தார்கள். அதில் ஒரு பெரும் எதிரி இருந்தான். அவனை மிகக் குறைவான மக்களால் மட்டுமே எதிர்கொள்ள முடிந்திருந்தது. அவன் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை எதிர்கொண்டான். பல மணி நேரம் அந்த வீரன் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தான். பல மணி நேர அந்த யூதனுடனான சண்டைக்குப் பிறகு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனை வீழ்த்தி விட்டார்கள். அவனது நெஞ்சில் ஏறி அமர்ந்து கொண்டார்கள். கத்தியால் அவனது கழுத்தை வெட்ட எண்ணம் கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென அந்த யூதன் அவர்களது முகத்தில் துப்பி விட்டான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் உடனடியாக அவனை விட்டு விலகி எழுந்து நின்று விட்டார்கள். அந்த யூதன் மிகவும் ஆச்சரியத்திற்கு உள்ளானான்.

மேலும் பல மணி நேர சண்டைக்குப் பிறகு நீங்கள் என்னை வீழ்த்தி விட்டீர்கள். அவ்வாறிருக்க திடீரென என்னை விட்டு விலகி விட்டீர்களே! இது நீங்கள் செய்த முட்டாள்தனம் இல்லையா? என்று அவன் கேட்டான். அதற்கு, நான் முட்டாள்தனம் இழைக்கவில்லை. மாறாக, நான் உன்னை தரையில் வீழ்த்தியபோது நீர் எனது முகத்தில் துப்பி விட்டீர். எனவே நீர் எனது முகத்தில் ஏன் துப்பினீர் என்று எனக்கு கோபம் ஏற்பட்டது. ஆனால் அத்துடன் எனக்கு இந்த எண்ணமும் தோன்றியது. அதாவது நான் இதுவரை இறைவனுக்காக போரிட்டுக் கொண்டிருந்தேன். இனி நான் இந்த சம்பவத்திற்குப் பிறகு உன்னுடன் சண்டையிட்டு உன்னை கொன்று விட்டால் அது எனது கோபத்தின் காரணமாக அமைந்து விடும் என்று நான் எண்ணினேன். எனவே கோபத்தின் காரணமாக மேலும் தனிப்பட்ட பகையால் உன்னை நான் கொலை செய்பவனாக இருப்பேன். அந்நிலையில் இறைவனின் திருப்தியை பெறுவதாக அது இருக்காது என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள். எனவே இப்போது உன்னை விட்டு விடுவதே சரியானது என்று நான் கருதினேன். எனது கோபம் தனிந்து விட்ட பிறகு இறைவனுக்காக நான் உன்னை வீழ்த்துவேன் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(அஹ்மதிய்யத் துன்யா மே இஸ்லாமி தஃலீம் வ தமத்துன்...
அன்வாருல் உலூம் தொகுதி 16 பக்கம் 132)

இதன் தொடர்ச்சி இன்ஷா அல்லாஹ் அடுத்த குத்பாவில் எடுத்துரைக்கப்படும்.

தற்போது நான் மற்றொரு விஷயத்தை கூற விரும்புகின்றேன். இன்று புதிய ஆண்டின் முதலாவது நாளாகும். மேலும் ஜுமுஆ நாளாகும். இந்த ஆண்டு ஜமாஅத்திற்கும், உலகத்திற்கும், மனித குலத்திற்கும் பரக்கத்திற்குரியதாக அமைய துஆ செய்யுங்கள். நாம் நமது கடமைகளை ஆற்றியவாறு முன்பை விட அதிகமாக இறைவனின் முன்னால் குனியக்கூடியவர்களாக ஆக வேண்டும். மேலும் நமது இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்தக்கூடியவர்களாக இருக்க வேண்டும். உலகமக்களும் தனது படைப்பின் நோக்கத்தை புரிந்தவாறு அல்லாஹ்விற்குரிய உரிமையை வழங்கக்கூடியவர்களாக ஆகிவிட வேண்டும். ஒருவர் மற்றவரின் உரிமையை பறிப்பவர்களாக ஆகுவதற்கு பகரமாக அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நடந்து ஒருவர் மற்றவரின் மற்றவரின் உரிமைகளை வழங்குபவர்களாக ஆக வேண்டும். அவ்வாறில்லையென்றால் இறைவன் மீண்டும் தனது வழிமுறைக்கேற்ப உலகமக்களுக்கு அவர்களின் கடமைகளின் பக்கம் கவனமூட்டுகின்றான். அந்தோ! நாமும் உலகத்தின் அனைத்து மக்களும் இந்த முக்கிய கருத்தை புரிந்து கொள்ள வேண்டுமே! மேலும் நமது உலகம் மற்றும் மறுமையை சீராக்கிக் கொள்ள வேண்டுமே!

கடந்த ஒரு வருடமாக நாம் மிகவும் அபாயகரமான தொற்று நோயை எதிர்கொண்டு வருகின்றோம். உலகத்தின் எந்தவொரு நாடும் இந்த தொற்று நோயிலிருந்து தப்பிக்கவில்லை. சில இடங்களில் குறைவாகவும், சில இடங்களில் அதிகமாகவும் உள்ளது. அவ்வாறிருந்தபோதிலும் உலகத்தின் பெரும்பான்மை இந்த விஷயத்தின் பக்கம் கவனம் செலுத்த விரும்பவில்லை. அதாவது நாம் நமது கடமைகள் மற்றும் உரிமைகளின் பக்கம் கவனம் செலுத்தாததன் விளைவாக கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக இறைவன் புறமிருந்து வந்திருக்கலாம் என்பதை இந்த உலகம் உணரவில்லை. அவர்கள் சிந்திக்கவும் விரும்பவில்லை. அல்லாஹ் நம்மை சிந்திக்க வைக்க விரும்புகின்றானா? நம்மை உணரச் செய்ய விரும்புகின்றானா? நமக்கு கவனமூட்ட விரும்புகின்றானா? என்று உலகம் சிந்திக்கவில்லை. இதன் பக்கம் எவருக்கும் சிந்தனை இல்லை.

சில மாதங்களுக்கு முன்பு ஏராளமான உலக அரசாங்கங்களின் தலைவர்களுக்கு இதன் பக்கம் கவனமூட்டி கடிதம் எழுதியிருந்தேன். கோவிட்–ஐ அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு புரிய வைக்க முயற்சி செய்திருந்தேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆபத்துகள் தனது கடமைகளை மறந்து அதன்படி செயல்படாததன் காரணமாகவும், இன்னும் சொல்வதென்றால் அநீதிகளில் முன்னேறியதன் காரணமாக வந்துள்ளன என்று நான் அவர்களுக்கு கவனமூட்டியிருந்தேன். எனவே கவனம் செலுத்துங்கள் என்றும் கூறியிருந்தேன்.

சில தலைவர்கள் பதிலும் அளித்திருந்தார்கள். ஆயினும் அவர்களின் பதில்கள் உலகவாதிகளின் பதிலாகவே இருந்தன. உலகவாதிகளின் பார்வையை அடிப்படையாகக் கொண்ட கூற்றுகளாகவே அவை இருந்தன. மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்ட பார்வையாக அவை இல்லை. இறைவனை அடிப்படையாகக் கொண்ட விஷயத்தை நான் அவர்களுக்கு அடிப்படையாக கூறியிருந்தேன். ஆனால் அதைப்பற்றி அவர்கள் எதுவும் கூறவில்லை. மேலும் தனது நிலைகளை மாற்றுவதன் பக்கம் செயல் ரீதியாகவும் செயல்பட விரும்பவில்லை. இவர்கள் தனது சமுதாயத்தின் மீது அனுதாபம் கொண்டு, தனது சமுதாயத்திற்கு அசல் நோக்கத்தின் பக்கம் கவனமூட்டுவதும் இல்லை; மேலும் இந்த தொற்று நோய்க்குப் பிறகு ஏற்படும் தாக்கம் மிகவும் அபாயகரமானதாக இருக்கும் என்பதை அறிந்திருந்த பிறகும் அதன் பக்கம் கவனம் செலுத்தவுமில்லை.

### திருக்குர்ஆனிலிருந்து...

நீர் சிறிது காலம் அவர்களை விட்டு விலகி விடுவீராக. மேலும் நீர் நன்கு பார்த்துக் கொண்டிருப்பீராக. நிச்சயமாக அவர்களும் (தங்கள் முடிவைக்) கண்டுகொள்வர். (37:179,180)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

உலகின் ஒவ்வொரு தலைவருக்கும் நன்றாகத் தெரியும். ஒவ்வொரு அறிவுடைய மனிதருக்கும் தெரியும். அறிஞர்களுக்கும் தெரியும். அவ்வாறு அறிந்திருந்த பிறகும் அதற்கு தீர்வு காண இவர்கள் கவனம் செலுத்துவதில்லை. உலக முயற்சிகளின் மீது மட்டுமே அவர்களின் பார்வை உள்ளது. இந்த நோயின் காரணமாக தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு நபரும் பொருளாதார ரீதியில் மட்டும் பலவீனமாக ஆகவில்லை. மாறாக, உடல் ரீதியாகவும் பலவீனமாகிக் கொண்டிருக்கின்றார். அது தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆயினும் ஒவ்வொருவரும் பொருளாதார ரீதியில் மிகவும் தாக்கத்திற்கு உள்ளாகி வருகின்றார். இன்னும் கூறப்போனால், பெரும் பெரும் பணக்கார நாடுகளின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு முறிந்து வருகின்றது.

உலகவாதிகளிடத்தில் இதற்கு ஒரேயொரு தீர்வுதான் உள்ளது. இதுபோன்ற நிலை ஏற்பட்டு விட்டால், பொருளாதாரம் அழிவிற்குள்ளாகி விட்டால் பின்னர் ஏனைய சிறிய நாடுகளின் பொருளாதாரத்தை அபகரித்துக் கொள்ள வேண்டும். அவர்களை எப்படியாவது தனது வலையில் சிக்க வைக்க வேண்டும். பின்னர் ஏதாவது சாக்குப் போக்குகள் கூறி அவர்களின் செல்வங்களை அபகரித்துக் கொள்ள வேண்டும். அதற்காக கூட்டணிகள் அமையும். அமைந்து வருகின்றது. போர் மீண்டும் ஆரம்பமாகி விடும். ஆரம்பாகிவிட்டது என்றே தற்போது கூறப்படுகிறது. ஆயுதங்கள் ஏந்தி செய்யப்படும் அசல் போர்கள் அதாவது மிகவும் அபாயகரமான போர் ஏற்படுவதும் தொலைவில் இல்லை. பின்னர் இந்த மக்கள் மிக ஆழமான கிடங்கில் வீழ்ந்து விடுவார்கள். ஏழை நாடுகளின் மக்கள் ஏற்கனவே அரைக்கப்பட்டு வருகின்றார்கள். பணக்கார நாடுகளின் மக்களும் அரைக்கப்படுவார்கள். மிக அபாயகரமான அளவில் அரைபடுவார்கள். உலகம் இந்த நிலையை அடைவதற்கு முன்பாக நாம் நமது கடமையை ஆற்றியவாறு உலகிற்கு எச்சரிக்கை செய்ய வேண்டும்.

எனவே நாம் நமது கடமையை இந்த அளவில் செலுத்தி மக்களுக்கு புரிய வைத்து செயல்படும்போதுதான், நாம் புத்தாண்டு வாழ்த்துக்களை கூறுவதற்கு பொருள் இருக்கும். ஆனால் இதை அனைத்தையும் செய்வதற்கு தத்தமது நிலைகளை ஆய்வு செய்ய வேண்டியது வரும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் காலத்தின் இமாமை ஒப்புக் கொண்ட நாம் நமது நிலைகளில் மாற்றம் செய்திருக்கின்றோமா? மேலும் நாம் அல்லாஹ்வின் உரிமைகளை வழங்குவதுடன் அல்லாஹ்விற்காக மட்டும் அவனது அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்கக் கூடியவர்களாக இருக்கின்றோமா? அல்லது இன்னும் நாம் நம்மை சீர்திருத்தி ஒருவர் மற்றவர் மீதான அன்பு, நேசத்தின் உணர்வுகளை அசாதாரண தரத்திற்கு எட்டச் செய்வது அவசியமாக இருக்கின்றதா? என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும்.

எனவே ஒவ்வொரு அஹ்மதியும் மிகவும் ஆராய வேண்டும். அவரிடம் ஒரு பெரும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனை செயலாற்றுவதற்கு முதலில் தம்மிடத்தில் அன்பு, நேசம், சகோதரத்துவத்தின் சூழலை உருவாக்க வேண்டும். தனது சமூகத்திலும், அஹ்மதி சூழலிலும் இந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பின்னர் உலகை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின்கீழ் கொண்டு வர வேண்டும். அந்த கொடி அல்லாஹ்வின் ஏகத்துவ கொடி ஆகும். அப்போதுதான் நாம் நமது பைஅத்தின் நோக்கத்தில் வெற்றி பெற முடியும். மேலும் அந்நிலையில்தான் நாம் பைஅத்திற்குரிய உரிமைகளை வழங்கக்கூடியவர்களாக இருக்க முடியும். மேலும் அந்நிலையில்தான் நாம் ஆல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசாக முடியும். மேலும் அந்நிலையில்தான் நாம் புத்தாண்டு வாழ்த்துக்களை கூறுவதற்கும், பெறுவதற்கும் தகுதி படைத்தவராக இருக்க முடியும். அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஒவ்வொரு அஹ்மதி ஆணும், பெண்ணும், இளைஞனும், சிறுவனும், முதியவரும் இந்த விஷயத்தை புரிந்தவாறு இவ்வாறு உடன்படிக்கை செய்ய வேண்டும். அதாவது இந்த புதிய ஆண்டில் உலகில் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதற்காக நாங்கள் எங்களது அனைத்து ஆற்றல்களையும் பயன்படுத்துவோம் என்று உறுதிமொழி எடுக்க வேண்டும். ஒவ்வொரு அஹ்மதிக்கும் அல்லாஹ் அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

இன்றைய நாட்களில் பாகிஸ்தான் அஹ்மதிகளுக்கும், அல்ஜீரியாவின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யும்படி உங்களுக்கு கவனமூட்டுகின்றேன். உங்களது துஆக்களில் அவர்களை நினைவில் வையுங்கள். பாகிஸ்தானில் சில இடங்களில் சில மவ்லவிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் அநீதிகளில் ஈடுபட்டுள்ளனர். அல்லாஹ் அதுபோன்ற சீர்திருந்தாத மக்களை விரைவில் பிடிப்பதற்குரிய ஏற்பாட்டைச் செய்வானாக. யாருடைய சீர்திருத்தம் ஏற்பட முடியும்? யாருக்கு ஏற்பட முடியாது என்பதை இறைவன் நன்கு அறிவான். எவருடைய சீர்திருத்தம் ஏற்பட முடியாதோ அந்நிலையில் அல்லாஹ் அவரை விரைவில் பிடிப்பதற்குரிய ஏற்பாட்டைச் செய்வானாக.

நபித்துவ நிந்தனை என்ற பெயரில் இயற்றப்பட்ட சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த மக்கள் அஹ்மதிகள் மீது அநீதியிழைக்க முயற்சி செய்கின்றனர். அஹ்மதிகளின் தர்பிய்யத்திற்காக நம்மிடமுள்ள சில வழிமுறைகளை அவர்கள் பல வழிகளில் தடை செய்ய முயற்சி செய்கின்றனர். அல்லாஹ் அதிலிருந்து அவர்களை விரைவில் தடுப்பானாக. நம்மையும் அவர்களிடமிருந்து அல்லாஹ் விரைவில் விடுவிப்பானாக. உண்மையில் இவர்கள் அகில உலகங்களுக்கும் அருட்கொடையாக தோன்றிய நபியின் பெயரை இழிவுபடுத்தக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். அஹ்மதிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக தங்களது உயிர்களையும் அர்ப்பணிக்கக்கூடியவர்கள் ஆவர். இன்று உலகை ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் கொண்டு வருவதற்கு மிக அதிகமாக இன்னும் கூறப்போனால் உண்மையிலேயே அஹ்மதிகள்தான் பணி செய்கின்றனர். மாறாக, உலகில் ஒருவர் பணி செய்கின்றார் என்றால் அது அஹ்மதிகள் மட்டும்தான் என்றே கூற வேண்டும்.

எனவே இந்த உலகவாதிகள் உலகியல் அரசாங்கம் மற்றும் செல்வத்தின் துணை கொண்டு நம்மீது அநீதியிழைக்க முடியும். ஆயினும் அவர்கள் நினைவிற் கொள்ள வேண்டும். நாம் சிறந்த எஜமானன் மற்றும் சிறந்த உதவியாளனாகிய இறைவனை ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றோம். நிச்சயமாக அவனது உதவி வரும். நிச்சயமாக வரும். அப்போது தனது அதிகாரம் மற்றும் வலிமையின் மீது பெருமிதம் கொண்ட உலகவாதிகளுக்கு மண் கூட தென்படாது. அல்லாஹ்வின் உதவியும் ஒத்தாசையும் வரும்போது அவ்வாறே நிகழும். எனவே நமது பணி என்னவென்றால், துஆக்களின் மூலம் நமது இறைவணக்கங்களை மேலும் அழகூட்ட வேண்டும். நாம் இதை செய்து விட்டால் பின்னர் நாமே வெற்றியாளர்கள் ஆவோம்.

நான் அல்ஜீரியாவைப் பற்றி கூறியிருந்தேன். அங்கு அனைவருமே விடுவிக்கப்பட்டு விட்டனர் என்றும் கூறியிருந்தேன். அங்கு ஒரு நீதிமன்றம் அனைவரையும் விடுவித்து விட்டது. மற்றொரு நீதிமன்றமும் சிறிய அபராதத்தை விதித்து சற்றேக்குறைய அனைவரையும் விடுவித்து விட்டது. ஆயினும் அங்கு இன்னும் இறைவழி கைதிகள் சிலர் உள்ளனர். அவர்கள் சிறைகளில் உள்ளனர். அவர்களுக்காக துஆ செய்யுங்கள். அவர்களின் விடுதலைக்கு விரைவாக ஏற்பாடு ஆகட்டுமாக.

பாகிஸ்தானிய கைதிகளும் விடுதலை ஆகுவதற்கு துஆ செய்யுங்கள். புத்தாண்டு துவக்கத்தின் மகிழ்ச்சியாக இருக்கட்டும் அல்லது பெருநாள் மகிழ்ச்சியாக இருக்கட்டும். அசல் மகிழ்ச்சி என்பது நாம் உலகின் எல்லா பக்கமும் அல்லாஹ்வின் ஏகத்துவ கொடியை பறக்க விடும்போதுான் ஏற்படும். அந்த ஏகத்துவ கொடியுடனேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றினார்கள். உலகம் மனித இனத்தின் மாண்புகளை அடையாளங்கண்டு கொள்ளும்போதுதான் நமக்கு உண்மையான மகிழ்ச்சி ஏற்படும். தங்களுக்கிடையிலான வெறுப்புகள் அன்பால் மாறி விட வேண்டும். அல்லாஹ் அந்த மகிழ்ச்சிக்கான ஏற்பாட்டையும் நமக்கு விரைவில் செய்வானாக.

இறைவன் புறமிருந்து தோன்றிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியை ஏற்றுக் கொள்ளக்கூடிய அறிவை அல்லாஹ் முஸ்லிம் சமுதாயத்திற்கு வழங்குவானாக. உலகிற்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக. உலகமும் அல்லாஹ் மற்றும் அவனது அடியார்களின் உரிமையை செலுத்துவதன் பக்கம் கவனம் செலுத்துபவர்களாக ஆக வேண்டும். அல்லாஹ் ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு அஹ்மதியையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக. இந்த ஆண்டு ஒவ்வொரு அஹ்மதிக்கும், ஒவ்வொரு மனிதனுக்கும் பரக்கத்திற்குரிய ஏற்பாட்டை செய்யட்டுமாக. கடந்த ஆண்டு நம்மிடம் ஏற்பட்ட குறைகளையும், இறைவனின் கோபத்திற்கு ஆளாக்கிய பலவீனங்களையும், சில அருட்கொடைகளிலிருந்து நம்மை விலக்கி வைப்பதற்கு காரணியாக இருந்தவற்றையும் அல்லாஹ் நம்மிடமிருந்து அகற்றுவானாக. மேலும் தனது அருட்களுக்கும், பரிசுகளுக்கும் வாரிசாக்குவானாக. நாம் உண்மையான நம்பிக்கையாளர்களாக ஆகிவிட வேண்டும். இந்த துஆக்களை செய்வதற்கு அல்லாஹ் நமக்கு நற்பாக்கியம் வழங்குவானாக.

(தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

### திருக்குர்ஆனிலிருந்து...

தூதர்களுக்கு என்றென்றும் சாந்தி நிலவுவதாக.
உலகங்களுகெல்லாம் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். (37:182,183)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபாவும், அன்னாரின் மருமகனுமாகிய ஹஸ்ரத் அலி முர்தஸா (ரலி) அவர்களின் போற்றுதலுக்குரிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 11 டிசம்பர் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **11 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் ஓர் உதாரணம் ஈமானுக்கு மிகவும் வலுவூட்டக்கூடியதாகும். அவர்கள் கைபர் போரில் ஒரு மிகப்பெரிய யூத தளபதியோடு போரிட முன் சென்றார்கள். வெகு நேரம் அவனோடு சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். ஏனெனில் அவனும் போர்த்திறன் பெற்றவனாக இருந்தான். எனவே நீண்ட நேரம் எதிர்த்துப போரிட்டுக் கொண்டிருந்தான். இறுதியில், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனை வீழ்த்தி விட்டார்கள். அவனது நெஞ்சில் ஏறி அமர்ந்து, வாளால் அவனது கழுத்தை வெட்ட முற்பட்டார்கள். இதற்குள் அந்த யூதன் அவர்களின் முகத்தில் துப்பிவிட்டான். அப்பொழுது, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனை விட்டு விட்டு விலகி நின்று விட்டார்கள். அந்த யூதன் வியந்தான். இவர் என்மீது ஆதிக்கம் பெற்று விட்டு என்னை விட்டு விட்டார். இவர் என்னைக் கொலை செய்ய முடிந்திருந்தும் இவர் ஏன் என்னை விட்டு விட்டார்? என்று எண்ணி, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம், நீர் ஏன் என்னை விட்டு விட்டு விலகி விட்டீர்? என்று கேட்டான்.

அதற்கு அன்னார் கூறினார்கள்: நான் இறைவனின் திருப்தியை பெறுவதற்காக உன்னோடு சண்டையிட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் நீ எனது முகத்தில் துப்பிய பிறகு எனக்கு கோபம் வந்து விட்டது. ஆக இப்பொழுது நான் உன்னைக் கொன்றால் நான் கொல்வது எனக்காக இருக்கும்; அல்லாஹ்வுக்காக இருக்காது என்று நான் நினைத்தேன். எனவே எனது கோபம் தணிவதற்காகவும், நான் உன்னைக் கொல்வது எனக்காக இல்லாமலிருப்பதற்காகவும் நான் உன்னைவிட்டு விட்டேன்.

இது எத்தகைய மகத்தான மேன்மை! சரியாகப் போர்க்களத்தில், அவர்கள் ஒரு கொடிய எதிரியை, கொல்வது தமது சொந்தக் கோபத்தினால் இருக்கக்கூடாது; மாறாக, அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காக மட்டும் விட்டு விட்டார்கள்.

(ஸேரே ரூஹானீ எண் 2 அன்வாருல் உலூம் தொகுதி 16 பக்கம் 74)

அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் சூரா தவ்பாவின் ஆரம்ப வசனங்களை ஹஜ் சந்தர்ப்பத்தில் அறிவித்தார்கள். இந்த அறிவிப்பு இவ்வாறு இருக்கிறது. அபூ ஜாஃபர் முஹம்மத் பின் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: சூரா பாரஅஹ் அதாவது சூரா தவ்பா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை ஹஜ்ஜின் அமீராக நியமித்து அனுப்பியிருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், தாங்கள் இந்த சூராவை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அவர்கள் அங்கு ஓதிக் காட்டும் பொருட்டு அனுப்பி வைத்து விடுங்கள் என்று கூறுப்பட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எனது வீட்டிலிருந்து ஒருவரைத் தவிர வேறு யாராலும் என் சார்பாக இந்தக் கடமையை நிறைவேற்ற முடியாது என்று கூறினார்கள்.

மேலும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை வரவழைத்து, அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: சூரா தவ்பாவின் துவக்கத்தில் இறங்கிய வசனங்களை எடுத்துச் செல்லுங்கள். குர்பானி நாளன்று மக்கள் மினாவில் ஒன்றுகூடும்போது, அவர்கள் மத்தியில் இவ்வாறு அறிவித்து விடுங்கள். எந்தக் காஃபிரும் சுவனத்தில் நுழைய மாட்டார். இந்த வருடத்திற்குப் பிறகு எந்த இணைவைப்பவருக்கும் ஹஜ் செய்யவும் அனுமதி இருக்காது; எவருக்கும் நிர்வாணமாக பைத்துல்லாஹ்வை வலம் வருவதற்கும் அனுமதி இருக்காது. எவரோடு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏதேனும் உடன்படிக்கை செய்திருக்கிறார்களோ அதன் காலம் பூர்த்தி செய்யப்படும்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெண் ஒட்டகமான அஸ்பா மீது பயணித்து புறப்பட்டார்கள். வழியிலேயே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை சந்தித்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை வழியில் பார்த்தபோது உங்களை அமீராக நியமிக்கப்பட்டுள்ளதா? அல்லுது நீங்கள் எனக்குக் கீழ் இருப்பீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள். உங்களுக்குக் கீழ் என்று கூறினார்கள்.

பிறகு இருவரும் புறப்பட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்களின் ஹஜ் விவகாரங்களைக் கண்காணித்தார்கள். அந்த வருடம் அரேபியர்கள், தாம் அறிவீன காலகட்டத்தில் கூடாரம் அமைத்து வந்த அதே இடங்களில் கூடாரம் அமைத்திருந்தார்கள். குர்பானி நாள் வந்தபோது, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் எழுந்து நின்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த விஷயங்களைக் கூறுமாறு கட்டளையிட்டிருந்தார்களோ அவற்றை அறிவித்தார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: மக்களே! எந்தக் காஃபிரும் சுவனத்தில் நுழைய மாட்டார். இந்த வருடத்திற்குப் பிறகு எந்த இணைவைப்பவரும் ஹஜ் செய்யவும் கூடாது; எவருக்கும் நிர்வாணமாக பைத்துல்லாஹ்வை வலம் வருவதற்கும் அனுமதி இருக்காது. எவரோடு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏதேனும் உடன்படிக்கை செய்திருக்கிறார்களோ அதன் காலம் பூர்த்தி செய்யப்படும். பிறகு ஒவ்வொரு சமுதாயமும் தனது பாதுகாப்பான பகுதிக்கோ அல்லது தனது பகுதிக்கோ திரும்பிச் சென்று விடுவதற்காக, மக்களுக்கு அந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்கள் வரை கால அவகாசம் கொடுக்கப்பட்டது. பிறகு இணைவைப்பவர் எவருக்கும் எந்த வாக்குறுதியும் உடன்படிக்கையும் எந்தப் பொறுப்பும் இருக்காது. ஒரு காலம் வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருக்கும் அந்த வாக்குறுதி மற்றும் உடன்படிக்கையைத் தவிர. அதாவது எந்த உடன்படிக்கைகளுக்கான கால அவகாசம் இப்போது எஞ்சியிருக்கிறதோ அந்த உடன்படிக்கைகளைத்தவிர, புதிதாக எந்த உடன்படிக்கையும் போடப்படமாட்டாது.

ஆக அது நிர்ணயிக்கப்பட்ட காலம் வரைப் பேணிக் காக்கப்படும். அந்த வருடத்திற்குப் பிறகு எந்த இணைவைப்பவரும் ஹஜ் செய்யவுமில்லை; எவரும் நிர்வாணமாக ஹஜ் செய்யவுமில்லை. பிறகு அவர்கள் இருவரும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஆஜராகி விட்டார்கள்.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா... பக்கம் 832 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த அறிவிப்பு முன்னரும் ஒரு சஹாபியின் நற்குறிப்பில் எடுத்துரைக்கப்பட்டுவிட்டது. இங்கு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தொடர்பாகவும் எடுத்துக் கூறி விடுகிறேன். அதை இப்போது நான் வாசிக்கப்

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்களுக்கு அறிவுரை கூறப்பட்டால், அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. அவர்கள் எந்த ஓர் அடையாளத்தைக் காணும் போதும் (அதனை) ஏளனமாகக் கருதுகின்றனர். (37:14,15)

Mohaideen Ali & M.Sabahul Islam
Melapalayam

போகிறேன். மக்கா வெற்றியின்போது ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு ரமலான் மாதத்தில், கி.பி.630 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நிகழ்ந்த சம்பவம்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னையும், ஸுபைரையும், மிக்தாத் பின் அஸ்வதையும் அனுப்பினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் ரவ்ஸா காக் – இது மக்கா வெற்றிக்கு முன்னுள்ள சம்பவமாகும். மக்கா வெற்றிக்கு முன்னுள்ள சம்பவம் எடுத்துரைக்கப்படுகிறது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் சென்று விடுங்கள். ரவ்ஸா காக் எனும் ஒரிடமிருக்கிறது. அங்கு நீங்கள் சென்றடைந்ததும், அங்கு ஒட்டகத்தின் மீது பயணித்தவாறு ஒரு பெண் இருப்பாள். அவளிடம் ஒரு கடிதம் இருக்கிறது. நீங்கள் அந்தக் கடிதத்தை அவளிடமிருந்து வாங்கி விடுங்கள். நாங்கள் புறப்பட்டோம். எங்கள் குதிரைகள் புயலாகப் பறந்து எங்களை அழைத்துச் சென்றன. நாங்கள் ரவ்ஸா காக் என்ற அந்த இடத்தை சென்றடைந்ததும் ஒட்டகத்தின் மீது பயணித்தவாறு ஒரு பெண்ணைப் பார்த்தோம். நாங்கள் அவளிடம், கடிதத்தை எடு என்று கூறினோம். அவள், என்னிடம் எந்தக் கடிதமுமில்லை என்றாள். நாங்கள், நீ கடிதத்தை எடுத்தே ஆக வேண்டும். இல்லையெனில் நாங்கள் உனது ஆடைகளைக் களைந்து உன்னை சோதனை போடுவோம் என்று கூறினோம். அப்பொழுது அவள் தனது கொண்டையிலிருந்து அந்தக் கடிதத்தை வெளியே எடுத்தாள். நாங்கள் அந்தக் கடிதத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்தோம்.

(அந்தக் கடிதத்தை திறந்து) பார்த்தபோது, அதில் ஹாதிப் பின் அபீ பல்தஆ தரப்பிலிருந்து மக்காவாசிகளின் இணைவைப்பவர்களுக்கு என்று எழுதப்பட்டிருந்தது. அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஏதோ ஓர் எண்ணத்தைப் பற்றி அவர்களுக்குத் தகவல் கொடுக்கப் பார்த்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹாதிப் பின் அபீ பல்தஆவை வரவழைத்து, ஹாதிப் இது என்ன? என்று கேட்டார்கள்.

அவர், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என் தொடர்பாக நீங்கள் அவசரப்படாதீர்கள். நான் குரைஷிகளுடன் வந்து கலந்து விட்ட, அவர்களைச் சேராத மனிதன் ஆவேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களோடு இருந்த ஏனைய முஹாஜிர்களுக்கு மக்காவில் உறவுகள் இருந்தன. அவர்கள் மூலமாக இவர்கள் தமது வீடு வாசல்களையும் சொத்துக்களையும் பாதுகாத்து வந்தார்கள். நான் அந்த மக்காவாசிகள் மீது ஏதாவது பேருபகாரம் செய்ய வேண்டும் என்று நினைத்தேன். ஏனெனில் எனக்கு அவர்களோடு எந்த உறவுமுறையும் இருக்கவில்லை. அவர்கள் இந்த பேருபகாரத்தின் காரணமாக எனக்கு உதவலாம். நான் எந்த ஒரு நிராகரிப்பின் காரணமாகவோ, மார்க்கத்தை விட்டு அகன்றோ இதை செய்யவில்லை. நான் நிராகரிக்கவுமில்லை; மார்க்கத்தை விட்டுச் செல்லவுமில்லை. நான் இந்த வேலையை இதற்காக செய்யவில்லை. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, ஒருபோதும் நிராகரிப்பை விரும்ப முடியாது. நான் தங்களுக்கு உறுதி அளிக்கிறேன் என்று கூறினார். இதைக்கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இவர் உங்களிடத்தில் உண்மையைக் கூறியிருக்கிறார் என்று கூறினார்கள். அதாவது அவர்கள் கூறியதை ஒப்புக் கொண்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 840)

இந்தச் சம்பவத்தை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு பலவீனமான சஹாபி மக்காவாசிகளுக்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 10,000 பேர் கொண்ட படையுடன் புறப்பட்டுள்ளார்கள்; அவர்கள் எங்கே செல்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது; ஆனால் அநேகமாக அவர்கள் மக்காவை நோக்கி வருகிறார்கள் என்று நான் அனுமானிக்கிறேன். மக்காவில் எனது சில அன்பர்களும், உறவினர்களும் உள்ளனர். நீங்கள் இந்த கஷ்ட காலத்தில் அவர்களுக்கு உதவுவீர்கள்; அவர்களுக்கு எந்த விதமான துன்பமும் ஏற்படவிட மாட்டீர்கள் என்று நம்புகிறேன் என்று கடிதம் எழுதிவிட்டார்.

இந்தக் கடிதம் மக்காவைச் சென்றடைவதற்குள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலை வேளையில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை வரவழைத்து, நீங்கள் இன்ன இடத்திற்குச் செல்லுங்கள். அங்கு ஒட்டகத்தின் மீது பயணித்தவாறு ஒரு பெண் உங்களுக்குக் கிடைப்பாள். அவளிடம் ஒரு கடிதம் இருககும். அதை அவள் மக்காவாசிகளிடம் எடுத்துச் செல்கிறாள் என்று அல்லாஹ் எனக்குக் கூறியுள்ளான். நீங்கள் அந்தக் கடிதத்தை அந்தப் பெண்ணிடமிருந்து வாங்கி விடுங்கள். அதை உடனடியாக என்னிடம் கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள்.

அவர்கள் புறப்பட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பாருங்கள்! அவள் ஒரு பெண். அவள் மீது கடினம் காட்டாதீர்கள். வலியுறுத்துங்கள். உன்னிடம் கடிதம் இருக்கிறது என்று அழுத்தம் கொடுங்கள். ஆனால் அவ்வாறும் அவள் கேட்கவில்லை என்றால், வேண்டிக் கேட்டும் பயனளிக்கவில்லை என்றால், பிறகு நீங்கள் கடினமும் காட்டலாம். அவளைக் கொலை செய்ய நேரிட்டால் நீங்கள் கொலையும் செய்யலாம். ஆனால் கடிதத்தை கொண்டு செல்ல விடக்கூடாது என்று கூறினார்கள்.

ஆக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அங்கு சென்றடைந்தார்கள். அங்கு (அந்தப்) பெண் இருந்தாள். அவள் அழ ஆரம்பித்து விட்டாள். சத்தியங்கள் செய்ய ஆரம்பித்து விட்டாள். நான் என்ன நம்பிக்கை துரோகியா? ஏமாற்றுக் காரியா? என்னதான் விஷயம்? நீங்கள் சோதனை போட்டுக் கொள்ளுங்கள் என்றாள். அவர்கள் இங்குமங்கும் பார்த்தார்கள். அவளது ஜோபுகளை சோதனை போட்டார்கள். பொருட்களைப் பார்த்தார்கள். ஆனால் கடிதம் கிடைக்கவில்லை. சஹாபிகள் கடிதம் இல்லை போலும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் உத்வேகம் ஏற்பட்டது. அவர்கள், நீங்கள் அமைதியாக இருங்கள் என்று கூறினார்கள். மேலும் மிகவும் உத்வேகத்துடன் அல்லாஹ்வின் மீது ஆணையாக! தூதர் ஒருபோதும் பொய்யுரைக்க முடியாது என்று கூறினார்கள். அவர்கள் அந்தப் பெண்ணிடம், உன்னிடம் கடிதம் இருக்கிறது என்று முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். இறைவன் மீது ஆணையாக! நான் பொய் கூறவில்லை என்று கூறினார்கள்.

பிறகு அன்னார் வாளை உருவினார்கள். மேலும் கூறினார்கள்: ஒன்று நீ நல்லமுறையில், கடிதத்தை வெளியே எடுத்துக் கொடுத்து விடு. இல்லையெனிறல் நினைவில் கொள். உன்னை நிர்வாணமாக்கி சோதனை செய்ய வேண்டி வந்தாலும் சரி! நான் உன்னை நிர்வாணமாக்குவேன். ஏனெனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையைக் கூறினார்கள். நீ பொய்யுரைக்கிறாய். ஆக அவள் பயந்து விட்டாள். அவளை நிர்வாணமாக்கி விடுவதாக அச்சுறுத்தியபோது, அவள் உடனடியாக தனது கொண்டைகளை அவிழ்த்தாள். அந்தக் கொண்டையில் அவள் கடிதத்தை வைத்திருந்தாள். அதை அவள் எடுத்துக் கொடுத்து விட்டாள்.

(ஸேரே ரூஹானீ (7), அன்வாரே உலூம் தொகுதி 24 பக்கம் 262,263)

பிறகு மற்றோர் இடத்தில், இந்தச் சம்பவத்தின் விளக்கத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துக் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் ஒரு சஹாபி தனது உறவினர்களுக்கு மக்காவில் முஸ்லிம்களின் தாக்குதல் குறித்த தகவலை ரகசியமாக எட்ட வைக்க விரும்பினார். இவ்வாறு அனுதாபத்தை வெளிப்படுத்துவதால், அவர்கள் அவருடைய உறவினர்களோடு நல்ல முறையில் நடந்து கொள்ளலாம் என்பதற்காகச் செய்தார். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த விஷயம் இல்ஹாம் மூலமாகத் தெரியப்படுத்தப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களையும் இன்னும் ஒரு சில சஹாபிகளையும், இன்ன இடத்தில் ஒரு பெண் இருக்கிறாள். அவளிடம் சென்று காகிதத்தைப் பெற்று வாருங்கள் என்று கூறி அனுப்பினார்கள். அவர்கள் அங்கு சென்று அந்தப் பெண்ணிடம் கடிதத்தைக் கேட்டபோது அவள் கொடுக்க மறுத்து விட்டாள். சில சஹாபிகள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தவறு ஏற்பட்டிருக்கலாம் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், இல்லை! அன்னாரின் கூற்று ஒருபோதும் தவறாக முடியாது. அவளிடமிருந்து காகிதம் கிடைக்காத வரை நான் இங்கிருந்து நகர மாட்டேன் என்று கூறினார்கள். அவர்கள் அந்தப் பெண்ணை திட்டியபோது அவள் அந்தக் காகிதத்தை எடுத்துக் கொடுத்து விட்டாள்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

தூதர்களாகிய நம் அடியார்களைக் குறித்து நம் தீர்ப்பு ஏற்கனவே நிகழ்ந்து விட்டது. நிச்சயமாக அவர்களுக்கே உதவி அளிக்கப்படும். 37:172,173)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ்வின் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களைத் தவிர, (அவர்களுக்கு வேதனையளிக்கக்கூடிய தண்டனை அளிக்கப்படுவதில்லை). (37:41)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381 58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 04 February 2021 Issue No. 5

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

(குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 4 பக்கம் 182,183 குத்பா ஜுமுஆ 25 செப்டம்பர் 1914)

மக்கா வெற்றியின்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுல் ஹராமில் வீற்றிருந்தபோது, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அன்னாரிடம் வந்தார்கள். அவர்களின் கைகளில் கஅபாவின் திறவுகோல் இருந்தது. அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களுக்கு ஸிகாயா அதாவது ஹஜ்ஜில் தண்ணீர் விநியோகிக்கும் பணியுடன் கானா கஅபாவின் திரைகளை அவிழ்க்கும் மற்றும் அணிவிக்கும் பணிகளின் பொறுப்புகளை ஒப்படைத்து விடுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உஸ்மான் பின் தல்ஹா எங்கே? என்று கேட்டார்கள். அவர்களை வரவழைத்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உஸ்மானே! இந்தாரும்! உமது திறவுகோல். இன்றைய நாள் நன்மை மற்றும் விசுவாசத்தின் நாளாகும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம், நான் உங்களுக்கு, நீங்கள் சிரமத்திலும் வேதனையிலும் விழக்கூடிய விஷயத்தை கொடுக்க மாட்டேன். மாறாக நன்மையும், பரக்கத்தும் இறங்கக்கூடியதை உங்களுக்கு கொடுப்பேன். நீங்கள் சுயமாகப் பொறுப்பைப் பெற விரும்பினால், நான் உங்களுக்கு அதை கொடுக்க மாட்டேன். கேட்டுப் பெறுகிறீர்கள் என்றால் பிறகு கிடையாது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உம்மே ஹானி பின்த் அபீ தாலிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் மேட்புற பகுதியில் முகாமிட்டிருந்தபோது, பனூ மக்ஸன் கோத்திரத்தைச் சேர்ந்த எனது கணவர்வழி உறவினர்கள் இருவர் என்னிடம் ஓடி வந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் உம்மே ஹானி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எனது சகோதரர் அலீ என்னிடம் வந்து, இறைவன் மீது ஆணையாக! நான் அவர்கள் இருவரையும் கொன்று விடுவேன் என்று கூறினார்.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா பக்கம் 744 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உம்மே ஹானி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் அவர்கள் இருவருக்காக என் வீட்டுக் கதவை அடைத்து விட்டேன். பிறகு, நானே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் மக்காவின் மேட்புற பகுதிக்கு வந்தேன். நான் அன்னாரை, மாவு குழைத்த அடையாளங்கள் இருந்த ஒரு தண்ணீர் பாத்திரத்திலிருந்து (நீரெடுத்து) நீராடப் பெற்றேன். அன்னாரின் மகள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் ஒரு துணியால் அவர்கள் மீது திரையிட்டுக் கொண்டிருந்தார்கள். நீராடிய பிறகு, அன்னார் தமது உடைகளை மாற்றினார்கள். பிறகு, சாஷ்த் நேரத்தில் எட்டு ரக்அத் தொழுதார்கள். பிறகு அன்னார் என்னைப் பார்த்து, உம்மே ஹானியே! வருக. எதற்காக வந்தீர்? என்று கேட்டார்கள். அவர்கள் அந்த இரு நபர் மற்றும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் குறித்த விவகாரம் முழுவதையும் கூறினார்கள். இவ்வாறு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவர்களைக் கொலை செய்ய விரும்பினார்கள். நான் அவர்களை என் வீட்டில் ஒளித்து விட்டு வந்துள்ளேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீர் அடைக்கலம் கொடுத்தவருக்கு நாமும் அடைக்கலம் கொடுத்தோம். நீர் பாதுகாப்பு அளித்தவருக்கு நாமும் பாதுகாப்பு அளித்தோம். அவர் அவ்விருவரையும் கொலை செய்ய வேண்டாம் என்று கூறினார்கள். அதாவது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், அவர்களைக் கொலை செய்ய மாட்டார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா பக்கம் 743,744 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹுவைரஸ் பின் நுகய்யதை கொலை செய்வதற்கு ஆணை பிறப்பித்திருந்தார்கள். ஏனெனில் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மக்காவில் கஷ்டம் கொடுத்து வந்தார். அன்னாருக்குக் கஷ்டம் ஏற்படுவதற்காக பெரிய பெரிய விஷயங்களைக் கூறி வந்தான். இழிவுபடுத்தி வந்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரரான ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களையும், ஹஸ்ரத் உம்மே மக்தூம் (ரலி) அவர்களையும் மக்காவிலிருந்து மதீனா அனுப்பி வைப்பதற்காக ஒட்டகத்தில் அமர்த்தியபோது, ஹுவைரஸ் அந்த ஒட்டகத்தை விழ வைத்து விட்டான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மக்கா வெற்றியின்போது, ஹுவைரஸ் பின் நுகய்யதை, அவன் தப்பியோடுவதற்காக புறப்பட்டபோது கொன்று விட்டார்கள்.

(அஸ்ஸீரத்துல் ஹல்பியா தொகுதி 3 பக்கம் 131 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பனூ தயீ என்ற இடத்தை நோக்கி ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் போரிட சென்றது தொடர்பாக வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை 150 நபர்களுடன் பனூ தயீயுடைய ஃபுல்ஸ் சிலையை விழ வைப்பதற்காக அனுப்பினார்கள். பனூ தயீ பகுதி மதீனாவின் வடகிழக்கு திசையில் அமைந்திருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு ஒரு கருப்பு நிற பெரியக் கொடியையும் ஒரு வெள்ளை நிற சிறியக் கொடியையும் வழங்கினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் காலை வேளையில், ஹாத்திம் கோத்திரத்தார் மீது தாக்குதல் தொடுத்தார்கள். அவர்களின் ஃபுல்ஸ் சிலையை விழ வைத்து விட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் பனூ தயீயிலிருந்து மிக அதிகமான போர்ச் செல்வங்களையும் கைதிகளையும் அழைத்துக் கொண்டு மதீனா திரும்பினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 331 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு ரஜப் மாதம் நடைபெற்ற தபூக் போர் குறித்து அறிவிப்பு வருகிறது. முஸ்அப் பின் சஅத் (ரலி) அவர்கள் தமது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக் போருக்காகப் புறப்பட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை தமது பிரதிநிதியாக மதீனாவில் நியமித்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், தாங்கள் என்னைப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் மத்தியில் விட்டுச் செல்கிறீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், உம்முடைய அந்தஸ்து என்னோடு ஹாரூனுக்கு மூஸாவோடு இருந்த அந்தஸ்தைப் போன்றது என்பதில் நீர் மகிழ்ச்சி அடையவில்லையா? ஆனால் எனக்குப் பிறகு நபி யாருமில்லை என்று கூறினார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 842 & அஸ்ஸீரத்துன் நபவிய்யா பக்கம் 744 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்தச் சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு முறைப் போருக்குச் சென்றார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை தமக்குப் பின்னால் பிரதிநிதியாக நியமித்துச் சென்றார்கள். பின்னால், நயவஞ்சகர்கள் மட்டுமே எஞ்சி விட்டார்கள். இதன் காரணமாக அவர்கள் பதற்றமடைந்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று, என்னையும் உடன் அழைத்துச் செல்லுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆறுதல் அளித்தவாறு இவ்வாறு கூறினார்கள்:

اَلَا تَرْضٰی اَنْ تَکُوْنَ مِنِّیْ بِمَنْزِلَۃِ ھَارُوْنَ مِنْ مُّوْسٰی اِلَّا اَنَّہٗ لَیْسَ نَبِیٌّ بَعْدِیْ

அதாவது உமக்கு என்னோடு ஹாரூனுக்கு மூஸாவோடு இருந்ததைப் போன்ற தொடர்பு இருக்கிறது. ஒரு நாள் ஹாரூனைப் போன்று, நீரும் என்னுடைய கலீஃபாவாக ஆவீர். ஆனால் இந்தத் தொடர்பு இருக்கும் பொழுதிலும் நீர் நபியாக மாட்டீர் என்று கூறினார்கள்.

(கிலாஃபத்தே ராஷிதா, அன்வாருல் உலூம் தொகுதி 15 பக்கம் 579)

*(தமிழில்: மவ்லவி அதாவுல் முக்னீ - தொடரும்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad